கல்கி



KI

மே 20, 1943 4 அண

பொள்ளாச்சி N. D. சகோதரர்களின் திருமணம்





பாலக்காடு முனிசிபல் ஹைஸ்கூல் உபாத்தியாயர், நூரணி கிராமம் ஸ்ரீ N. D. தர்மராஜ அய்யர் குமாரர்கள் ஸ்ரீ N. D. சுப்பிரமணியத்திற்கும் ஸ்ரீ N. D. விஸ்வநாதனுக்கும் சிறப்பாக திருமணங்கள் நடந்தன. N. D. பிரதர்ஸ் என்ற பெயரில் எண்ணெய் வியாபாரம் நடக்கும் இடமாகிய



மேற்கண்ட ரிகார்டுகள் எங்களிடம் கிடைக்கும்:

S. கண்ணன் & கம்பெனி, திருச்சிராப்பள்ளி.



ஜம்மியின் லிவர் க்யூருக்கு வந்தனம்

எல்லாவிதமான சிகிச்சையாலும் கைவிடப்பட்ட, முற்றிப்போன ஈரல்குலைப் பெருக்கத்தினின்றும் என் உயிரைக் காப்பாற்றியது.

ஈரல் குலைக்கட்டி முதலியவைகளுக்கு இது ஒரு அதி அற்புத நிவாரணி.

எல்லா மருந்து ஷாப்பிலும் கிடைக்கும்.

ஜம்மி வெங்கடரமணய்யா & சன்ஸ்
மயிலாப்பூர் மதராஸ்

சப் ஆபீஸ்: கும்பகோணம்

பிராஞ்சுகள் : பம்பாய், கல்கத்தா, லக்னோ, திருச்சிராப்பள்ளி, பெங்களூர்

இந்தியன் பாங்க்

லிமிடெட்.

●

தலைமை ஆபீஸ்:

"இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்"
வடக்கு பீச் ரோடு :: மதராஸ்

●

லோகல் ஆபீஸ்கள் :

எஸ்பிளனேட், திருவல்லிக்கேணி, மயிலாப்பூர், தியாகராய நகர், புரசவாக்கம், மவுண்டு ரோடு.

தென்னிந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் பிரான்சுகளும் சப் ஆபீஸ்களும் உள்ளன.

●

அதிகாரம் பெற்று வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் ரூ. 60,00,000

செலுத்தப்பட்ட மூலதனம்
(26-3 43உயாக) ரூ. 27,41,390

ரிஸர்வ் நிதி
(26-3-43உயாக) ரூ. 29,46,915

மொத்த லேவாதேவி
7 கோடிக்கு மேல்

●

சகலவிதமான பாங்க் அலுவல்களும் ஏற்றுக்கொண்டு நடத்தப்பெறும்.

பூரா விவரங்களுக்கும் பாங்கியின் எந்த ஆபீஸிற்காவது விண்ணப்பித்துத் தெரிந்து கொள்ளலாம்.

N. கோபால அய்யர்
செக்ரடரி.

கல்கி பொருளடக்கம்

மலர் 2 இதழ் 30 | 1943 மே 20 | சுபாநு வைகாசி 6உ

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனைச் சம்பவங்கள்.



★ தற்காலத்தில் வீட்டுக்கு வீடு ஒரு ஸரோஜா இருப்பதற்கு ஆதி காரணமானவர் ஸ்ரீமதி ஸரோஜினி தேவி. இந்தியாவின் பெண் குலத்துக்கே பெருமையளித்தவர். இளம்பிராயத்தில் ஆங்கிலத்தில் அழகிய கவிதைகள் புனைந்து ''இந்தியாவின் பாடும் குயில்'' என்று பெயர் பெற்றார். ஹோம்ரூல் இயக்கத்தின் காலத்தில் தேசீய இயக்கத்தின் முன்னணிக்கு வந்தார். அவருடைய தலைமையில் காஞ்சீபுரத்தில் நடந்த மாகாண மகாநாடு தமிழ் நாட்டில் ஒரு புதிய அரசியல் சகாப்தம் தோன்றுவதற்குக் காரணமாயிருந்தது. மகாத்மாஜி இந்திய தேசீய இயக்கத்தின் தலைமை தாங்கிய பிறகு, அவர் இட்ட கோட்டைத் தாண்டாமல் பணி செய்து வருகிறார். பல முறை சிறை வாசம் செய்திருக்கிறார். சமீபத்தில் அவரது உடல் நலம் குன்றியிருப்பதாகச் சிறையிலிருந்து விடுவிக்கப் பட்ட போது தேசம் பெரிதும் கவலைக்குள் ஆழ்ந்தது. அதிர்ஷ்டவசமாக அவர் விரைவில் குணமடைந்த செய்தி கிடைத்து தேச மக்கள் ஆறுதல் அடைந்தனர்.



தொழிலாளர்களுக்கென்றே தயாரிக்கப் பட்டவை!

சிறந்த கெடிகாரத்திற்கென அதிக செலவு செய்யும் சக்தியற்றவர்களாயினும், ஆனுல் ஒரு நல்ல கெடிகாரத்தின் அவசியத்தையே வேண்டுகிற தொழிலாளர்கள் இந்த "டோஸ்டு" பாக்கெட் கெடிகாரத்தை வாங்கிக்கொள்ளலாம். குற்றங்குறையற்ற நல்ல மூலப்பொருள்களால் இந்த வெஸ்ட் என்டு கெடிகாரம் செய்யப்பட்டிருக்கிறது. அஜாக்கிரதையாக உபயோகித்தபோதிலும், இது சரியான மணியைக் காட்டி நீடித்து உழைக்குமாறு இதன் எல்லா பாகங்களும் நன்கு அமைக்கப்பட்டிருக்கின்றன. இன்றே ஒரு "டோஸ்டு" கெடிகாரத்தை வாங்குங்கள். இவ் விலையில் உங்களது பூரண திருப்திக்கு உகந்த கெடிகாரம் இதுவே என்பதை அனுபவத்தில் அறிந்து கொள்வீர்கள்.

"டோஸ்டு"

16" சைஸ் — உறுதியான — நம்பிக்கையுள்ள கிலெஸ் லீவர் கெடிகாரம்

நிக்கல் சில்வர் கேஸ் ... ரூ. 26.

ரோமன் அல்லது அராபிக் எண்களுடன் கூடியது ஒரே விலைதான்.

வெஸ்ட் என்டு வாட்ச் கோ.,
பம்பாய் — கல்கத்தா.

WEST END WATCH CO.

BOMBAY CALCUTTA

கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா—பாரதியார்

என்ன சேதி?

பெருமைதான் : ஆனால் —

டுனீஷியாவில் தோல்வி யடைந்த ஜெர்மன் சைனியத்தின் தலைவர் தளபதி வான் ஆர்னிம் ஓர் இந்தியப் படையினிடத்தில் சரண்புகுந்தாராம். இந்தியாவுக்கு இது ஒரு மகத்தான பெருமைதான். ஆனால் இந்தப் பெருமையை முன்னிட்டுப் பொறுப்பு எதுவும் ஏற்படக் கூடாதென்று மட்டும் சிறிது கவலையா யிருக்கிறது. தளபதி வான் ஆர்னிமை ஆகாய விமானத்தில் இங்கிலாந்துக்குக் கொண்டு போயிருக்கிறார்களாம். அங்கே அவரை இராணுவ மரியாதைகளுடன் சிறையில் வைப்பதோடுகூட, ஏற்கெனவே ஜெர்மன் சைனியத்தில் அவர் என்ன சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தாரோ அதே சம்பளம் அவருக்குக் கொடுத்து வருவார்களாம்! சபாஷ்! தோல்வியடைந்த பகைவர்களை இப்படியல்லவா நடத்த வேண்டும்? இதையும், இந்தியாவில் நமது காங்கிரஸ் தலைவர்களைச் சிறையில் நடத்தும் விதத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, "இங்கிலீஷ்காரர்களுடன் ஒன்று சிநேகமாயிருக்க வேண்டும்; அல்லது அவர்களுடைய பகைவர்களாக இருக்க வேண்டும்; அவர்களுடைய ஆட்சியின் கீழ் பிரஜைகளாக மட்டும் இருக்கக் கூடாது!" என்று தோன்றுவது இயல்புதான். இது நிற்க தளபதி வான் ஆர்னிமுக்குக் கொடுக்கப் போகும் மாதச் சம்பளத்தை யார் கொடுப்பது? இந்தியத் துருப்புகள் அவரைச் சிறைபிடித்தபடியால் இந்தியாதான் அந்தச் சம்பளத்தைக் கொடுக்க வேண்டுமென்று ஒரு வேளை பொறுப்பை நம் தலையில் சுமத்தி விடுவார்களோ? — இதைப் பற்றித்தான் நமக்குக் கொஞ்சம் கவலை; மற்றப்படி நமது பெருமைக்கும் குஷிக்கும் குறைவே யில்லை.


பங்கு உண்டா?


டுனீஷியாப் போர் முடிந்ததும் "வட ஆப்பிரிக்காவுக்கு நாம் **எஜமானர்**களாகி விட்டோம்" என்ற அர்த்த புஷ்டி கொண்ட சின்னஞ் சிறு செய்தியை ஜெனரல் அலெக்ஸாண்டர் பிரதம மந்திரி சர்ச்சிலுக்கு அனுப்பினாராம்.


இதிலிருந்து, மேற்படி எஜமானத்துவம் யுத்தம் முடியும் வரையிலா, அதற்குப் பிறகும் உண்டா என்ற கேள்வி கிளம்புகிறது. யுத்தம் முடிந்த பிறகு வட ஆப்பிரிக்காவின் நிலைமை என்ன ஆகும்? நார்வேயையும், ஹாலந்தையும், மற்ற ஐரோப்பிய நாடுகளையும் போல் வட ஆப்பிரிக்காவை வட ஆப்பிரிக்கா சுதேசிகளுக்கே சுதந்திரமாய்க் கொடுத்து விடுவார்களா? அப்படியானால், நமக்கு இரட்டிப்பு சந்தோஷந்தான். அல்லது பழைய மாமூல்படி ஜயித்த கட்சியைச் சேர்ந்த தேசங்கள் வட ஆப்பிரிக்காவைப் பங்கு போட்டுக் கொள்வார்களா?

அப்படிப் பங்கு போட்டுக் கொள்வதா யிருந்தால், இந்தியாவுக்குப் பங்கு உண்டா? வட ஆப்பிரிக்கா வெற்றிக்கு இந்தியா எத்தனையோ வகையில் உதவி செய்திருக்கிறதே? இந்தியத் துருப்புகள் வீரத்துடன் போர் புரிந்தன; எவ்வளவோ இந்திய வீரர்கள் அப்போரில் உயிரை இழந்திருக்கிறார்கள்; எவ்வளவோ உணவுப் பொருள்கள் இந்தியாவிலிருந்து போயிருக்கின்றன. எனவே, வட ஆப்பிரிக்காவில் பங்கு கேட்க இந்தியாவுக்குப் பூரண பாத்தியதை உண்டல்லவா? ஆனால், இதையெல்லாம் யார் கேட்கப் போகிறார்கள்? நமது தேசத் தலைவர்கள் அரசாங்கத்தில் இருந்தாலல்லவா கேட்கலாம்?

ஐந்து ரூபாய் பரிசு : *சென்ற இதழ்க் காலக்ஷேபத் துணுக்குக்குப் பரிசு பெற்றவர் : எஸ். பரசுராமன், வில்லிவாக்கம்.*


"1942ம் வருஷத்தில் மாகாணத்தில் காலரா வியாதி பரவுமென்று நாங்கள் முன்னமேயே எதிர் பார்த்துக் கூறியிருந்தோம்" என்று சென்னை சர்க்கார் வருஷாந்திர அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள்.
சென்னை சர்க்கார் ஜோதிட சாலை
பண்டித ஸர் ஆர்தர் ஹோப் சாஸ்திரிகள்
எல்லாவித ஜோதிடமும் சொல்லுவார்
யுத்த ஜோஸியத்தில் நிபுணர்
பஞ்சாங்கம்



டாக்டர் அம்பேத்கார் வைஸ்ராயின் விசாலிக்கப்பட்ட நிர்வாகசபையைச் சேர்ந்ததிலிருந்து அவருடைய மண்டையும் விசாலித்துக் கொண்டே வருகிறது. ஆசியல் ரேச்னை சம்பந்தமாக யோசனைகளை வெளியிட்ட வண்ணம் இருக்கிறார்.


நசத்தில் இன்னும் பொதுஉடைமைக் கட்சியினர் கைது செய்யப்டுவதைப் பார்த்தால் அதிகார வர்க்கத்திற்கு இன்னும் சிவப்புக் காடியின் பயம் தெளியவில்லை என்று தோன்றுகிறது.
அதிகார வர்க்கம்
கம்யூனிஸ்ட்


பாகிஸ்தானப் பிசாசுடன் தாம் தன்னந்தனியே போராடப் போவதாக சவர்க்கார் பயமுறுத்துகிறார்.



ரயில்வே நெருக்கடி பிரச்னை.



"அமிருத பஜார் பத்திரிகை"யின் ஆசிரியரின் புகாருக்குச் சர்க்கார் அளித்த பதிலில், ரயில்களில் ராணுவத்திற்காக இடம் ஒதுக்கி வைக்க வேண்டிய அவசியத்தை வற்புறுத்தியிருக்கிறார்கள்.

தர்மமே ஜயம்

வட ஆப்பிரிக்கப் போர் முடிந்து விட்டது. டுனீஷியாவில் பிரிட்டிஷ்—அமெரிக்கருக்குப் பெரிய வெற்றி; ஜெர்மனி—இதாலிக்கு முதல் தரமான தோல்வி. இதை முன்னிட்டு நாளை 21உ இந்தியாவெங்கும் டுனீஷியா தினம் கொண்டாட வேண்டுமென்று வைஸராய் தெரிவித்திருக்கிறார். நேசக் கட்சிக்கு வெற்றியையும் அச்சுக் கட்சிக்குத் தோல்வியையும் அளித்ததின் பொருட்டு நாளைக்குக் கடவுளுக்கு வந்தனம் செலுத்த வேண்டுமாம். நாம் அவ்விதம் கடவுளுக்கு வந்தனம் செலுத்தப் போவதில்லை.

ஏனென்றால், இன்று டுனீஷியா வெற்றிக்காக நாம் கடவுளுக்கு வந்தனம் செலுத்துவதென்றால், நேற்று டன்கர்க்கிலும், டொப்ருக்கிலும் ஏற்பட்ட தோல்விகளுக்காக அவரைத் திட்டி யிருக்கவேண்டும்! இன்னும், சிங்கப்பூர், ரங்கூன் தோல்விகளுக்காகக் கடவுளை வெளுத்து வாங்கியிருக்க வேண்டும்! இன்னும், இன்றைய தினம் பர்மா—அரக்கானி லிருந்து நமது துருப்புக்கள் பின் வாங்குவதற்காகவும் கடவுளை, "என்ன சொல்கிறீர், ஐயா!" என்று கேட்கவேண்டும்.

கடவுளுடைய சித்தம் நம்மால் அறிய முடியாதது. அவருடைய லீலைகளின் கருத்தை நாம் உணர்வதும் முடியாத காரியம்.

மனிதர்களுடைய காரியங்களில் அவ்வளவு நேர் முகமாகவும் உடனுக்குடனேயும் பகவான் தலையிடுகிறார் என்று சொல்வதற்கில்லை.

அப்படித் தலையிடுவதாயிருந்தால், ஐரோப்பா கண்டத்து வெள்ளைக்காரர்கள் சென்ற நானூறு வருஷ காலத்தில் செய்திருக்கும் பயங்கரமான அக்கிரமங்களையெல்லாம் அவர் சகித்துக் கொண்டிருக்க முடியுமா? அமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா என்னும் மூன்று கண்டங்களையும் அந்தந்த தேசத்து மக்களிடமிருந்து திருடி அபகரித்து ஐரோப்பியர் பங்கு போட்டுக் கொண்டிருக்கிறார்களே, அந்த அநியாயத்தைக் கடவுள் சும்மா பார்த்துக் கொண்டிருந்திருப்பாரா? இந்தியாவிலிருந்து சென்ற 150 வருஷமாய்க் கோடி கோடியான பணத்தை அடித்துக் கொண்டு போகிறார்களே, அதைத் தான் கடவுள் தடுத்திருக்க மாட்டாரா? சமீப காலத்தில் சீன தேசத்தில் ஜப்பான் செய்துவரும் அநியாயங்களைப் பார்த்துக் கொண்டிருப்பாரா?

போலந்திலும் ஹாலந்திலும் ஜெர்மானியர் ராட்சஸப் படுகொலைகள் செய்து அந்நாடுகளை ஜயித்தார்கள். அந்த வெற்றிகளுக்காக ஜெர்மானியர் கடவுளுக்கு நன்றி செலுத்தி யிருக்கலாம். அந்த நன்றியைக் கடவுள் ஏற்றுக் கொண்டிருப்பாரா?

ஆகவே, யுத்தத்தில் வெற்றி—தோல்வி சம்பந்தப்பட்ட வரையில், கடவுளைத் தனியாக ஒதுக்கி வைத்து விட்டு நமக்கு அதனால் அநுகூலமா, பிரதிகூலமா என்று பார்ப்பதுதான் முறையாகும். அநுகூலமென்றால் சந்தோஷப்பட வேண்டியது; பிரதிகூலமென்றால் துக்கம் கொண்டாட வேண்டியது.

இந்த முறையில், வட ஆப்பிரிக்கா வெற்றியைப் பற்றி யோசிக்கலாம். அது எவ்வளவு பிரமாதமான வெற்றி என்பதை நன்கு உணர வேண்டுமானால், அதற்காக எவ்வளவு மகத்தான பிரயத்தனங்கள் நடந்தன என்பதைக் கவனிக்க வேண்டும். சுமார் இரண்டரை லட்சம் ஜெர்மன் வீரர்கள் வட ஆப்பிரிக்காவில் இருந்திருக்கலாம் என்று தெரிகிறது. அவர்களைக் கிழக்கே யிருந்து வீர தளபதியான மாண்ட்கோமரியின் தலைமையில் எட்டாவது வீர சைன்யம் துரத்திக் கொண்டு போயிற்று. மேற்கே யிருந்து பிரிட்டிஷ் முதல் சைன்யமும், பெரிய அமெரிக்க சைன்யமும் முன்னேறி வந்தன. நடுவில் தெற்கே யிருந்து பிரஞ்சு சைன்யம் நெருக்கிக் கொண்டு வந்தது. வடக்கே மத்திய தரைக் கடலிலோ பிரிட்டிஷ் கப்பற்படை தயாராய்க் காத்துக் கொண்டிருந்தது. இப்படியாக, மகாபாரத யுத்தத்தில் வீர அபிமன்யுவைச் சூழ்ந்து கொண்டது போல், நாலா புறத்திலும் வான் ஆர்னிம் சைன்யத்தை நேசப் படைகள் சூழ்ந்து கொண்டன. ஆனால், அபிமன்யுவைப்போல் கடைசி வரையில் போராடி வான் ஆர்னிம் படைகள் சாகவில்லை. தப்ப முடியாது என்று

தெரிந்ததும், வெள்ளைக்கொடி போட்டுச் சரணாகதி அடைந்து விட்டார்கள். ''உயிர் பெரிதன்று; மானந்தான் பெரிது'' என்னும் வீர தர்மமெல்லாம் மலையேறிப் போய்விட்டது. ''மானமாவது மண்ணாங் கட்டியாவது; ஜயிக்க முடியாவிட்டால் ஓடிப்போய்த் தப்பலாம்; அதுவும் முடியாவிட்டால் சரணடைந்தாவது உயிரோடிருக்கலாம்'' என்பதுதான் இந்தக் காலத்து வீர தர்மம் ஆகிவிட்டது! அதன்படி தளபதி ரோமல் தப்பி ஓடி விட்டார்; அதன்படியே வான் ஆர்னிமும் அவருடைய ஒன்றரை லட்சம் வீரர்களும் சரணடைந்து யுத்தக் கைதிகள் ஆகி விட்டார்கள்.

தோல்வியைக் காட்டிலும், தோல்வியடையாமலிருப்பது எப்போதும் நல்லது; அதைக் காட்டிலும் வெற்றியடைவது ரொம்ப விசேஷம். அந்த வெற்றியும் பெரிய வெற்றியாயிருந்தால் கேட்க வேண்டியதில்லை. வட ஆப்பிரிக்காவில் நேசக் கட்சிக்கு மகத்தான வெற்றி என்பதில் சந்தேகமில்லை. இந்த வெற்றியின் மூலம் ஜெர்மனியின் கை ரொம்பவும் தாழ்ந்து விட்டது; நேசக் கட்சியின் கை மிகவும் உயர்ந்து விட்டது.

அச்சு நாடுகள் வெற்றி யடைந்தால் உலகத்துக்கே பெரிய விபரீதமாகும் என்று நாம் நம்புகிறோம். அந்த விபரீதத்தைத் தடை செய்வது எதுவும் உலகத்துக்கு அநுகூலமானதுதான்; உலகத்துக்கு எது நல்லதோ, அதுவே இந்தியாவுக்கும் நல்லது என்று சொல்ல வேண்டியதில்லை.

எனவே, வடஆப்பிரிக்காவில் பிரிட்டிஷ் — அமெரிக்கர் அடைந்த வெற்றியின் பொருட்டு நாம் மகிழ்ச்சி யடைவதும், அதைக் குதூகலமாகக் கொண்டாடுவதும் இயற்கையேயாகும். அதிலும், மேற்படி வெற்றியில் நமது இந்தியத் துருப்புகள் முக்கிய பங்கு பெற்றுள்ளபடியால் நமது குதூகலமும் கொண்டாட்டமும் பிரமாதமாயிருக்கவேண்டும். ஆனால், அவ்விதம் குதூகலம் அடைவதற்கும் கொண்டாடுவதற்கும் ஒரு பெரிய தடை குறுக்கே நிற்கிறது. அது, நமது அன்புக்கும் பக்திக்கும் உரிய தேசத் தலைவர்கள் சிறையில் கிடந்து வாடுவதுதான். மகாத்மாவும், ஜவாஹர்லாலும் சிறையில் கிடக்கும்போது, நாம் எப்படி உற்சாகத்துடன் வெற்றிக் கொண்டாட்டம் நடத்த முடியும்?

சற்றே கற்பனை செய்து பார்க்கலாம். இச்சமயத்தில் இந்திய அரசாங்கமானது ஜவாஹர்லால், புலாபாய், ராஜேந்திர பிரஸாத் போன்ற நமது தேசத் தலைவர்கள் அடங்கிய தேசிய அரசாங்கமாயிருக்குமானால், நமக்கு எவ்வளவு குதூகலமாயிருக்கும்? இந்த டுனிஷியா வெற்றியை எவ்வளவு உற்சாகமாகக் கொண்டாடுவோம்? இந்தியா தேசம் முழுவதும் நாளைக்கு என்ன பாடு படும்? நரகாசுர வதத்தை முன்னிட்டுத் தீபாவளி கொண்டாடுவது போல் கொண்டாட மாட்டோமா?

ஆனால், நாளை உண்மையில் நடக்கப் போவது என்ன? சர்க்கார் உத்தியோகஸ்தர்களும், யுத்தப் பிரசாரகர்களும் சேர்ந்து டுனிஷியா வெற்றியைக் கொண்டாடப் போகிறார்கள். அவ்வளவுதான். மற்றப்படி, பொது மக்களிடையில், உற்சாகத்தையோ கொண்டாட்டத்தையோ நாம் காணப் போவதில்லை.

எந்த உலக க்ஷேமத்தை முன்னிட்டு வட ஆப்பிரிக்கா வெற்றியை நினைத்து நாம் திருப்தி யடைகிறோமோ, அதே உலக நன்மையை முன்னிட்டுத் தான் இந்தியாவின் தற்போதைய நிலைமை நமக்குச் சோகத்தைத் தருகிறது.

ஏனெனில், டுனிஷியா வெற்றியுடன் யுத்தம் முடிந்து போய்விடவில்லை. ஜெர்மன் ராணுவ பலத்தை இன்னும் அழித்தாகி விடவில்லை. அதற்கு இன்னும் பெரிய பலமான பிரயத்தனம் செய்தாக வேண்டும். ஜெர்மன் ராணுவத்தைக் காட்டிலும் உலகத்துக்கு இப்போது பெரிய அபாயமாயிருப்பது ஜப்பானுடைய சைன்ய பலமேயாகும். அந்த பலம் இதுவரையில் பெருகி வந்திருக்கிறதே தவிரக் கொஞ்சமாவது குறைந்தபாடில்லை. இந்தக் கவலைக்கிடமான நிலைமையைப் பற்றி யோசிப்பதற்காகவே சர்ச்சில் மீண்டும் அமெரிக்காவுக்குப் போயிருக்கிறார். அதே சமயத்தில் பிலிப்ஸும், தளபதி வேவலும் அங்கே போயிருக்கிறார்கள். ஜப்பானை வெல்ல வேண்டுமானால், அதற்கு ஆயத்தங்கள் இந்தியாவிலே தான் செய்யவேண்டும் என்பதை எல்லாரும் உணர்ந்திருக்கிறார்கள்.

அந்த ஆயத்தங்களில் எல்லாம் முதல் ஆயத்தம் என்ன? இந்தியாவின் அரசியல் பிரச்னையை நல்லபடியாகத் தீர்த்து வைப்பதுதான்; இந்திய மக்க

ளின் உண்மைத் தலைவர்களைச் சிறைகளிலிருந்து விடுதலை செய்து, அவர்களைக்கொண்டு தேசிய அரசாங்கத்தை ஏற்படுத்துவது தான்.

இந்தப் பல்லவியைத்தான் எத்தனையோ தடவை பாடியாகி விட்டதே? — திருப்பித் திருப்பிப் பாடுவதில் என்ன பிரயோஜனம்? — என்று கேட்கத் தோன்றலாம். நமது நாட்டில் வெகு காலமாக "தர்மமே ஜயம்" என்னும் நம்பிக்கை குடி கொண்டு வந்திருக்கிறது. தர்மம் அடியோடு தொலைந்து போய்விட்டது என்று தோன்றிய சமயங்களில் கூட நமது பெரியோர்கள் மேற்படி நம்பிக்கையைக் கைவிட்டு விடவில்லை.

"தர்மத்தின் வாழ்வதனைச் சூதுகவ்வும்
தர்மம் மறுபடி வெல்லும்"

என்று அவர்கள் சொன்னார்கள். அது மாதிரியேதான் நடந்து வந்திருக்கிறது.

பஞ்ச பாண்டவர்கள் எத்தனையோ துன்பங்களுக்கு உள்ளானார்கள்; துரியோதனனுடைய கை வெகு காலம் வரையில் ஓங்கித்தான் இருந்தது. கடைசியில், பாண்டவர்களின் தர்மக் கட்சி ஜயித்தது!

இப்போது நம் கண் முன்னே, தளபதி ரோமல் எல் அலமின் வரையில் வந்திருந்தார். "பிரிட்டிஷ் கட்சி தொலைந்து போய்விட்டது" என்று பயப்படும்படி இருந்தது. ஆனாலும், கடைசியில், பிரிட்டிஷார் ஜயித்து விட்டார்கள்.

ஆகவே, கடைசிச் சண்டையில் ஏற்படும் வெற்றி — தோல்விகள்தான் முக்கியமானவை. அவற்றிலிருந்து தான் "தர்மமே ஜயம்" என்னும் கொள்கை எவ்வளவு தூரம் உண்மை என்பதை நிர்ணயிக்க வேண்டும்.

இந்த யுத்தம் ஆரம்பித்தது முதல் இந்தியாவில் தர்மம் தோற்று வந்திருக்கிறது: அதிகார வர்க்கத்தின் சூது ஜயித்து வந்திருக்கிறது.

பாண்டவர்கள் சகுனியின் சூது வலையில் விழுந்தது போல், காங்கிரஸ் தலைவர்கள் அதிகார வர்க்கத்தின் சூழ்ச்சி வலையில் விழுந்து விட்டார்கள்.

காங்கிரஸ் மந்திரி சபைகளைத் தொலைத்துவிட வேண்டுமென்று அதிகாரவர்க்கம் சூழ்ச்சி செய்தது; அந்தச் சூழ்ச்சி நிறைவேறிற்று.

கிரிப்ஸ் தூது வெற்றியடையக் கூடாது என்று அதிகாரவர்க்கம் விரும்பிற்று; கிரிப்ஸின் முகத்தில் கரியைப் பூசி அனுப்ப வேண்டுமென்று எண்ணிற்று. அந்த எண்ணமும் நிறைவேறியது.

இந்தியாவில் தேசிய சர்க்கார் ஏற்படக் கூடாது என்பது அதிகாரவர்க்கத்தின் விருப்பம். காங்கிரஸ் — முஸ்லிம் லீக் ஒற்றுமை ஏற்பட்டு விட்டால் தேசிய சர்க்கார் ஏற்படாமல் தடுக்க முடியாதென்று அதிகாரவர்க்கத்துக்குத் தெரியும். எனவே, காங்கிரஸ் — லீக் ஒற்றுமை ஏற்படாதிருப்பதற்கு அதிகாரவர்க்கம் நாளதுவரை சூழ்ச்சி செய்து, வெற்றியடைந்தும் வருகிறது.

அன்று தர்மாத்மாக்களான பஞ்ச பாண்டவர்கள் விதி வசத்தால் சூதாட்டத்துக்கு இசைந்தது போலவே, இன்று அதிகார வர்க்கத்தின் சூழ்ச்சிகள் பலிப்பதற்கு நமது காங்கிரஸ் தலைவர்களும் இடந் தந்து வந்திருக்கிறார்கள்.

ஆனால், "தர்மமே ஜயம்" என்ற கொள்கையில் நமது முன்னோர்களுக்கிருந்த நம்பிக்கை நமக்கும் இருக்கிறது. அதிகாரவர்க்கத்தின் சூதுகளுக்கும், சூழ்ச்சிகளுக்கும் கடைசியில் வான்ஆர்னிமுக்கு நேர்ந்த கதிதான் நேருமென்று நாம் நம்புகிறோம். கூடிய சீக்கிரம் இந்தியா தேசத்தில் ஒற்றுமை ஏற்பட்டு, தேசிய சர்க்கார் அமைக்கப்படு மென்றும் எதிர்பார்க்கிறோம்.

அப்போது நேசக் கட்சியின் ராணுவ பலம் பன்மடங்கு பெருகுவதோடு, அதன் தார்மிக பலமும் பூரணமடையும். ஜெர்மனியையும் ஜப்பானையும் அடியோடு முறியடிப்பது சாத்தியமாகும். உலகம் உண்மையான க்ஷேமம் அடையும்.

அக்குப் போர்

"காசி"

● "இந்தியாவுக்குப் புதிய வைஸராய் நியமனமாகி விட்டது. அதைப் பற்றிய அறிக்கை இன்னும் சில நாளைக்குள் வெளியாகும். அந்த அறிக்கையைக் கண்டு எல்லாரும் ஆச்சர்யப்பட்டுப் போவார்கள்" என்று செய்திகள் பயமுறுத்துகின்றன.

அப்படி நம்மைப் பிரமிக்க வைக்கக் கூடிய அறிக்கை பின் வருமாறுதான் இருக்குமென்று நினைக்கிறேன் :—

"இந்தா லின்லித்கோ
வைஸராய் உத்தியோகம்

இந்தியா தேசம் உள்ளளவும்
இமயம் உள்ளளவும்

சர்ச்சிலாதி அமெரிகள் உள்ளளவும்
சாம்ராஜ்யம் உள்ளளவும்,

இந்தா, இந்தா, இந்தா, இந்தா!"

★

"லார்டு லின்லித்கோ பிரபுவுக்கு இன்னும் அதிக அதிகாரங்கள் கொடுக்கப்படலாம்" என்றும் சொல்கிறார்கள். யுத்தத்தில் ஜயிப்பதற்காகவே இப்படி அதிகாரங்கள் கொடுக்கப் போகிறார்கள் என்று நினைக்கிறேன். ஏனென்றால் அப்புறம் ஹிட்லர், "உலகத்தில் நம்மைவிட அதிகாரமுள்ள ஒருவர் இருக்கிறாரே?" என்ற அவமானம் தாங்காமல் தற்கொலை செய்து கொள்ளலாமல்லவா?

★

ஒருநாளு மில்லாத திருநாளாய் சித்திரை வைகாசி மாசத்தில் அக்கினி நக்ஷத்திரத்திலேயே ஏன் இப்படி விடா மழை பெய்து கொண்டிருக்கிறது என்று ஒருவர் கேட்கிறார்.

பர்மாவுக்குள் நுழைந்து அதைத் திரும்பிப் பிடிப்பதற்குத் தடையாய் இருப்பது என்ன? மழைகால மல்லவா? ஆகையால் சட்டுப் புட்டென்று பர்மாவைத் திரும்பிப் பிரிட்டிஷாரிடம் ஒப்படைப்பதற்காகக் கடவுளே பார்த்து மழை பெய்யச் செய்திருக்கலாம்.

★

பர்மிய எல்லையிலிருந்து நேசப் படைகள் பின் வாங்கியதற்கு ஏழு காரணங்கள் சொல்லுகிறார்கள். அவற்றில் ஒன்று, பிரிட்டிஷ் துருப்புகள் ஜப்பானியரைவிட அதிகத் தீனி தின்பது தானாம். அப்படியானால், இதுவரை இராணுவ இலாகா அதிகாரிகள் துருப்புகளுக்கு "ஜீரண சஞ்சீவி மாத்திரைகள்" ஸப்ளை செய்யாமல் வேறு என்ன செய்து கொண்டிருந்தார்களென்று கேட்கிறோம்.

★

டுனீஷியாவில் நடந்த போரில் கிட்டத்தட்ட ஒன்றரை லக்ஷம் ஜெர்மன் துருப்புகளும் இத்தாலியத் துருப்புகளும் சரணடைந்தார்களாம். ஆனால் அவர்கள் அதற்காகக் கொஞ்சம் கூடக் கவலைப்படவே இல்லையாம். மாமியார் வீட்டுக்குப் போகும் மருமகப் பிள்ளைகள் போல் சந்தோஷத்துடன் வந்து சரணடைந்தார்களாம்.

ஒரு வேளை இந்தியாவில் இத்தாலியக் கைதிகள் சம்பிரமமாய்ச் சாப்பிட்டுக் கொண்டிருப்பது அவர்களுக்கு ஏற்கெனவே தெரிந்திருக்க வேண்டும். அல்லது நேச விமானங்கள் டுனீஸ் பிரதேசங்களின் மீது வீசிய துண்டுப் பிரசுரங்களில் மேற்படி கைதிகளுக்கு அளிக்கப்படும் சாப்பாட்டு ஜாப்தா கொடுத்திருந்தார்களோ, என்னமோ?

★

"பிரிட்டனில் இன்னும் ரொட்டி 'ரேஷன்' செய்யப்படவில்லை. ஆசியா, ஐரோப்பாக் கண்டங்களிலுள்ள தேசங்களுக்குள்ளே, பிரிட்டனில் உள்ளவர்கள்தான் நல்ல சாப்பாடு சாப்பிடுகிறார்கள்" என்று பிரிட்டிஷ் உணவு இலாகா அதிகாரிகள் பெருமை யடித்துக் கொள்கிறார்கள்.

இதைக் கேட்கும்போது இந்தியாவில் கோதுமையையும், நெல்லையும் பயிரிட்டுக் கொண்டு விவசாய தேசமாய் இருப்பதைக் காட்டிலும் பிரிட்டனைப் போல் நிலக்கரி உற்பத்தியில் ஈடுபடலாமென்று தோன்றுகிறது.

★

"இந்தியா — கிருமிகளின் சுவர்க்கம்" என்று பிவர்லி நிக்கல்ஸ் என்ற ஆங்கில ஆசிரியர் கூறுகிறார்.

இதற்குக் காரணம், இந்தியா ஏற்கெனவே இந்தியர்களின் இரத்தத்தை உறிஞ்சும் அன்னிய அட்டைகளின் சுவர்க்கமா யிருப்பது தான் என்பதை இவர் மறந்துவிட்டார் போலிருக்கிறது.

கேட்டுப் பாருங்கள்!

மே௴ 21௳. சென்னையில் ஸ்ரீ ராமநாராயணன் 7 மணிக்கும் 10 மணிக்கும் பாடுகிறார். இந்தச் சிறந்த பாடகருக்கு இன்னும் முழு நேரக் கச்சேரி கிடைக்காதது ரேடியோ மர்மங்களில் ஒன்று. அன்று ஸ்ரீ வி. எஸ். பார்த்தசாரதி அய்யங்காரின் கோட்வாத்தியமும் கேட்கலாம்.

22௳. முசிரி சுப்பிரமண்ய ஐயரின் கச்சேரி.

23௳. சென்னையில் ஸ்ரீ டி. புட்டுசாமி ஐயா பாட்டு. திருச்சியில் திருவையாறு அண்ணாசாமி பாகவதர் காலட்சேபம்.

24௳. சித்தூர் சுப்பிரமணியப் பிள்ளை பத்து உருப்படிகளை ஜமாய்த்து விடப் போகிறார்.

25௳. ஸ்ரீ எஸ். வி. பார்த்தசாரதி பாட்டு.

26௳. திருச்சியில் குழல் இசையும் குரல் இசையும் சேர்ந்து 7-45க்குக் கேட்கும். டி. டி. சங்கரய்யரின் வயலின் இசை தனியாக 8-45க்கு வரும். பகல் 2 மணிக்கு ஸ்ரீமதி அலமேலுவின் தமிழிசை.

27௳. சென்னையில் எஸ். வி. எஸ். சரஸ்வதியின் பாட்டு. திருச்சியில் ஆலத்தூர் சகோதரர்களின் பெரிய கச்சேரி; ஸ்ரீ ராஜமாணிக்கம் பிள்ளை வயலின்.

28௳. திருச்சியில் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் சகோதரர்களின் நாதஸ்வரம்.

29௳. சென்னையில் யுனைடெட் ஆர்டிஸ்ட்ஸ் வாத்தியக் கோஷ்டி சங்கீதமும், ஸ்ரீ எஸ். சோமசுந்தரம் பாட்டும் கேட்கலாம்.

30௳. திருச்சியில் எம். ஜி. நாகோஜி ராவ் கச்சேரி. சென்னையில் மன்னார்குடி சாம்பசிவன் பாடுகிறார். 8-45க்கு ஸ்ரீமதி ஏ. ஆர். சுந்தரம் பாட்டு அவசியம் கேட்கவும்.

31௳. சென்னையில் ஸ்ரீமதி ராஜம் வைத்தியநாதனின் பாட்டையும், திருச்சியில் ஸ்ரீமதி



ராஜம் வைத்தியநாதன்

எம். ஆர். குஞ்சம்மாள் பாட்டையும் கேட்டுப் பார்க்க வேண்டும். இரவு திருப்பாம்புரம் சுவாமிநாதப் பிள்ளையின் குழலோசை இருக்கவே இருக்கிறது.

வட்ட மேஜை

புரசைவாக்கம்,
12—5—43.

கல்கி ஆசிரியர் அவர்களுக்கு,

மே மாதம் 10௳ இதழைப் படித்து முடித்ததும் எனக்கு ஒரு ஆறுதல் உண்டாயிற்று. இந்த யுத்த காலத்தில் ஒன்றுக்கு நான்கு பங்கு விலையைப் பெற்றுக்கொண்டு வழக்கத்தை விட மட்ட ரகமான பொருள்களை விற்பவர்கள் நிறைந்த உலகில் கல்கி மாத்திரம் விலை ஏற்றத்தைச் சிறந்த வகையில் ஈடு செய்துகொண்டு வருவதைக் கவனிக்கும் போது யாருக்குத்தான் ஆறுதலாயிராது?

யுத்தத்தின் நடுவில் ஆரம்பித்து இரண்டு வருஷங்களுக்குள் இவ்வளவு தூரம் முன்னேறி இப்பொழுது தமிழ்நாட்டின் — தமிழரின் — தனிப் பத்திரிகையாய் விளங்குகிறது கல்கி. மூன்று வாரத்தில் ஐந்து லட்சம் பிரதிகள் விலையாகக் கூடிய (அமெரிக்க) நாட்டிலும் இத்தகைய அதிசயம் நடக்குமா என்பது சந்தேகமான விஷயமே.

சென்ற இதழில் மணியம் தீட்டியுள்ள வர்ண ஓவியத்தின் அழகுக்கு இணையாக எவரும் தீட்ட முடியாதென்றே நினைக்கிறேன். சாமாவின் உண்மைத் திறமை இப்பொழுது வேகமாய் வெளிப்படுவதை அவருடைய படங்களில் காண்கிறோம்.

''ஊமை கண்ட கனவு'' என்பதைப் பொய்ப்பிக்கிறார் நாம் காணும் அரசியல் கனவுகளைத் தத்ரூபமாய்ப் படம் பிடித்துக் காட்டும் வாயிலாக நம் சித்திரக்காரர் ஊமன். தீபாவளி மலரில் வர்மாவின் வர்ணப் படங்களைக் கண்டு மகிழ்ந்தவர்களுக்கு அவர் இன்னும் பல வர்ணப் படங்கள் எழுதுகிறார் என்னும் விஷயம் மிகுந்த களிப்பை அளிக்கும்.

அன்பர்கள் டி. கே. ஸி., பி. ஸ்ரீ. ஆச்சாரியா இவர்களின் இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் பற்றி நான் என்னத்தைச் சொல்ல? — அவைகள் தமிழில் இதுவரையில் வந்திராத கருத்துக்களையும் ,பாவங்களையும் வெளிப்படுத்துகின்றன என்று சொல்வதையல்லாமல்.

* * *

கல்கி இதழ்களின் 'கெட்-அப்' நாளுக்கு நாள் — அதாவது ஒவ்வொரு இதழிலும் அபிவிருத்தியடைந்து வருகிறது.

சென்ற இதழில் இரண்டு புது அம்சங்கள் வெளி வந்திருப்பதைப் பார்த்தேன். அது போல் மற்றும் பல அம்சங்கள் அடிக்கடி வெளியாகுமென்றும், கல்கி எப்பொழுதும் பழைமை அடையாமல் புது மணம் வீசிக்கொண்டு தமிழர் மனத்தில் தனி இடம் பெற்று நிலைத்திருக்க வேண்டுமென்பதும் என் விருப்பம்.

கே. ஆர். கல்யாணராமன்.



ஆடல் பாடல்



"கர்நாடகம்"

ஒரு பழைய படம்

தமிழ் டாக்கி எடுப்பவர்களுக்குச் சென்னை நகர் வாசிகள்மேல் என்ன கோபமோ, அல்லது சந்தேகமோ, தெரிய வில்லை. சதாரணமாய் ஒரு படம் வெளியாகி ண்ட காலத்துக்குப் பிறகுதான் சென்னைக்கு னுப்புகிறார்கள். அவர்களைப் பழி வாங்கு தற்காக, நானும், ஒரு தமிழ்ப் படம் சென்னைக்கு வந்து வெகு காலைக்குப் பிறகு ன் அதைப் பார்ப்பதென்று வைத்திருக் றேன். சில சமயம் சில படங்கள் என்னை மாறச் செய்து விட்டுச் சட்டுப்புட்டென்று டியே போகின்றன! அவற்றுக்கு ஒரு லாம்' வைத்து விடுகிறேன். — இவ்வா ன்றி "மனோன்மணி" என்ற படம் ருபத்தைந்து வாரத்துக்குமேல் சென்னையில் டாமல் ஓடிக் கொண்டிருக்கவே, அதைப் ர்க்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு ட்டது.

"மனோன்மணி"யைப் பார்க்கும் விஷயத் ல் நான் மிகவும் தயங்கியதற்கு ஒரு விசேஷ ரணம் இருந்தது. தற்காலத் தமிழர் நக்குத் தமிழின் சிறப்பை இடித்துக் கூறிய ரியார் காலஞ்சென்ற ஆசிரியர் பி. சுந்தரம் ர்ளை. அவர் இயற்றிய காவியம் "மனோன் ணி". இந்தக் காவியத்தை ஒரு காலத்தில் க ஆர்வத்துடன் நான் படித்தேன். அதை க்கி எடுத்த புண்ணியவான்கள் எப்படிக் டிச் சுவரா யடித்திருப்பார்களோ, அதைப் ரய்ப் பார்ப்பானேன் — என்பதுதான் க்கத்துக்குக் காரணம்.

டாக்கியைப் பார்த்த பிறகு ரொம்பவும் ர ஆறுதல் உண்டாயிற்று என்பதை ழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன். நிச்சயமாகக் ச்சுவரா யடிக்கவில்லை; அதற்கு மாறாக, ன்மணி"யை மிகவும் உயர்தரத் தமிழ்ப் மாகக் கொண்டுவர முயற்சி செய்திருப்பது ருய்த் தெரிகிறது. அந்த வரையில் வும் திருப்தி யடைய வேண்டிய காரியம்.

இந்த டாக்கியில் முக்கியமான சில நல்ல அம்சங்கள் இருக்கின்றன :—

(1) கதையை நன்றாக டாக்கிக்கு அமைத் திருக்கிறார்கள். "மனோன்மணி" கதை முன்னால் தெரியாத சில நண்பர்கள் என்னு டன் படம் பார்த்தார்கள். அவர்கள் பெரும் பாலும் கதைப் போக்கை நன்றாய்த் தெரிந்து கொள்ள முடிந்தது.

(2) காட்சி ஜோடனைகள் எல்லாம் பிரமாதமா யிருந்தன. அரண்மனை என்றால் அரண்மனைதான்; சபாமண்டபம் என்றால் சபாமண்டபந்தான்; போர்க்களம் என்றால் போர்க்களந்தான். யுத்தக் காட்சிகூட, பழைய காலத்து நிஜ யுத்தக் காட்சி மாதிரியே தோன்றியது.

(3) இந்தப் பேசும் படத்தை, நல்ல தமிழ் பேசும் படம் என்று சொல்லலாம். வெறும் சொல்லடுக்குகளோ, கொச்சைத் தமிழோ இல்லாமல், சுத்தமான உணர்ச்சியுள்ள தமிழ் நடையில் சம்பாஷணை அமைந்திருக்கிறது.

மற்றப்படி, டாக்கியிலுள்ள முக்கியமான குறை என்னவென்றால், நடிகர்கள் இன்னும் கொஞ்சம் பொருத்தமாகவும் நடிப்பு இன்னும் கொஞ்சம் வாய்ப்பாகவும் இருந்திருக்கலா மென்பதுதான்.

ஆண் நடிகர்களில் சிலர் — ஒவ்வொருவரே தனித் தனியாகத் திரையை அடைத்துவிடக் கூடியவர்களா யிருக்கிறார்கள்! இரண்டு பேர் வந்துவிட்டால் திரையில் இடநெருக்கடிதான்!

கதாநாயகன் புருஷோத்தமனாக நடித்திருக் கும் ஸ்ரீ சின்னப்பா கொஞ்சம் 'பெரியப்பா' வாகவே இந்தப் படத்தில் காட்சி யளிக்கிறார். ஆவேசம் வரும்போது காலில் 'ஸ்பிரிங்' உள்ளவரைப்போல் அவர் குதித்து குதித்து (சென்னைத் தமிழில் 'எகிரி எகிரி')ப் பேசு வது எதிர்பாராத ஹாஸ்யமாகிறது. 'அப்பா'

என்ற பெயர் முடிவு உள்ளவர்களின் பாட்டெல்லாம் எப்படியோ ஒரே பாணியில் அமைந்து விடுகிறது. பிர்க்காக்கள் ஒரே சங்கதி - ஸங்கதி மயமாயிருக்கின்றன.

ஆனால், ஸ்ரீ சின்னப்பாவும் சரி, மற்ற ஆண் நடிகர்களும் சரி, இந்தப் படத்தில் தெளிவாகவும், கூடிய வரையில் உணர்ச்சியுடனும் நன்றாய்ப் பேசி யிருக்கிறார்கள் — நன்றாய் நடித்து மிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகிறேன்.

கதாநாயகி "மனோன்மணி"யாக நடித்திருக்கும் ஸ்ரீமதி டி. ஆர். ராஜகுமாரி, வாயைத் திறக்காமல் சித்திரப் பதுமையாக நடிக்க வேண்டிய இடங்களி லெல்லாம் அபாரமாய் நடித்திருக்கிறார். மற்றப்படி அவருடைய நடிப்பானது, பரத நாட்டியத்தில் 'அலாரி'ப்பில் கழுத்தை யசைப்பதுபோல்



அசைப்பதுடன் முடிந்துவிடுகிறது. ஸ்ரீமதி ராஜகுமாரி கொஞ்சம் பாடியிருக்கிறார்; சற்றே அழுதிருக்கிறார். ஒரு சமயம் பாட்டையும் அழுகையையும் கலந்து, எது பாட்டு, எது அழுகை என்று கண்டு பிடிக்க முடியாமல் நம்மைத் திணற அடித்துவிடுகிறார்!

மனோன்மணி காவியத்தில், நம்முடைய மனதைப் பெரிதும் கவரும் பாத்திரம் மனோன்மணியின் தோழியாகிய வாணி. படத்தில் இந்தப் பாத்திரமாக நடிப்பவர் குருகுரு வென்று இருக்கிறார். சுமாராய் நடிக்கிறார். ஓரிடத்தில் அதிகப்படியாக அழுது விரஸப் படுத்தி விடுகிறார்.

"மனோன்மணி" படத்தில் ரொம்ப நன்றாய் நடித்திருப்பவர்கள் யார் என்று கேட்டால்,—கேட்பானேன்?—என். எஸ். கிருஷ்ணனும், டி. ஏ. மதுரமுந்தான். தொட்டதை யெல்லாம் துலங்க வைக்கும் சக்தி ஸ்ரீ என். எஸ். கிருஷ்ணனிடம் இருக்கிறது. ஹாஸ்ய நடிப்பிற்குப் புதிது புதிதான விஷயங்களும் இவருக்கு எப்படியோ கிடைத்துக் கொண்டிருக்கின்றன. "சகுந்தலை" படத்திலிருந்து இந்த தம்பதிகளுடைய 'காமிக்' எல்லாம்—பாமரர்களுடன் படித்தவர்களும் ரஸிக்கும்படியாக உயர்தரமா யமைந்து வருகின்றன. இன்னொரு முக்கிய விஷயம் சமீபத்திலேதான் எனக்குத் தெரிய வந்தது. எந்தப் படத்தில் இந்த தம்பதிகள் நடித்தாலும் இவர்களுடைய பகுதி சம்பந்தப்பட்ட வரையில்,

கதை : என். எஸ். கிருஷ்ணன்

வசனம் : என். எஸ். கிருஷ்ணன்

பாட்டு : என். எஸ். கிருஷ்ணன்

டைரக்ஷன் : என். எஸ். கிருஷ்ணன்

என்று போட வேண்டியதுதானும்.

அமெரிக்காவில் சார்லி சாப்ளின் எந்த ஸ்தானத்தை வகிக்கிறாரோ, ஏறக்குறைய அந்த ஸ்தானத்தைத் தமிழ் நாட்டில் ஸ்ரீ என். எஸ். கிருஷ்ணன் கூடிய சீக்கிரம் அடையக் கூடும் என்று கருதுகிறேன்.

இந்த "மனோன்மணி" படத்தில் கடைசியில் ஸ்ரீ என். எஸ். கிருஷ்ணன் 'ஏஹோஹோ ஹோஹோ' என்று உள்ளே ஓடுவதும், உடனே எருமை மாடு பிரவேசிப்பதுமான காட்சியைப் பார்க்கும்போது, நாலு மணி நேரம் படம் பார்த்ததில் ஏற்பட்ட களைப்பெல்லாம் நமக்கு மாறிப் போய் விடுகிறது. திரும்பி வீட்டுக்குப் போகையில் நாம் "ஏஹோஹோஹோ!—மனோன்மணி—ஓஹோ ஹோஹோ!—வெகு ஜோர்!" என்று சொல்லிக் கொண்டு போகிறோம்.

* * *

ஆபாசமான அசட்டுக் கதைகளை இன்னும் ஆபாசப்படுத்திப் படமெடுக்கலாம்; அதில் பிரமாதமான 'வெற்றி'யும் அடையலாம். அத்தகைய 'வெற்றி'யில் சந்தோஷம் அடைகிறவர்கள் அடையட்டும். என் வரையில் உயர்தரமான கதைகளை உயர்தரமாக எடுக்க முயன்று அதில் 'தோல்வி' யடைந்தாலும் அதுவே மேன்மை என்று கருதுகிறேன். இந்த முறையில், சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ்காரர்கள் இந்த உயர்தர டாக்கி எடுக்க முயன்றது பற்றி நமது வாழ்த்துக்கு உரியவர்களாகிறார்கள்; அந்த முயற்சியில் அவர்கள் ஓரளவு வெற்றியும் அடைந்திருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

அந்தப்புரப் பேச்சு

★

● "ராதை! இதென்ன, பேப்பர் எல்லாம் இப்போ இப்படியா வருகிறது?" என்று சீதா ஆச்சர்யத்துடன் கேட்டாள்.

"எப்படி!" என்றாள் ராதை.

"நடுவில் உள்ளங் கை அகலத்துக்குக் கிழித்திருக்கிறதே! காகிதம் அகப்படவில்லையாமே, அதற்காக இப்படி நடுவில் கிழித்தெடுக்கணும் என்று சர்க்காரிலே உத்தரவு போட்டிருக்கிறாளோ? — காலணாக் காசுக்கு நடுவிலே ஓட்டை பண்ணியிருக்காப்பிலே?"

"அதெல்லாம் இல்லை? நான் தான் கிழிச்சேன்" என்றாள் ராதை.

"எதற்காக?"

"பின்னே, பாருங்களேன். தினம் ஆத்திலே அவர் பேப்பரை எடுத்து வச்சண்டு படிக்க உட்கார்ந்து கொண்டால், அப்புறம் இந்த லோகத்திலேயே இருக்கிறதில்லை. கூப்பிடக் கூப்பிட என் என்று கேட்கிறதில்லை.



ஒரு நாளைக்கு எனக்குப் பிரமாதக் கோபம் வந்துவிட்டது: 'என்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டேளா, பேப்பரைக் கல்யாணம் பண்ணிக் கொண்டேளா?' என்று கேட்டு விட்டேன்."

"அதற்கென்ன சொன்னார்?"

"இடும்பாகப் பதில் சொன்னார். 'உனக்கு ஏன் சந்தேகம் வந்துவிட்டது? இரண்டு வருஷங்களுக்கு முந்தி நல்ல சுபயோக சுப தினத்தில் பந்துக்கள் முன்னிலையில் நம்ம இரண்டு பேருக்கும் விவாகம்!' என்று ஆரம்பித்து விட்டார்."

"அப்புறம்?"

"அதற்கென்ன பதில் சொல்கிறது? ாமலிருந்தேன். இன்றுதான் இந்த யோசனை தோன்றிற்று. பேப்பரை நடுவில் கிழித்து விட்டால் அவர் முகத்தை ஒரொரு சமயம் பார்க்கலா மல்லவா?"

"பேஷ்! நல்ல காரியஞ் செய்தாய்? அப்படித்தான் அவாளுக்குப் பாடங் கற்பிக்கணும். பேப்பரிலே என்ன விசேஷம்?"

"யாரோ இரண்டு பெண்கள் சர்க்கார் ஆபீஸிலே டைப் ரைட்டிங் வேலை பார்க்கிறார்களாம். அதைப் பற்றி அவர் கூடச் சொல்லிவிட்டுப் பரிகாசம் பண்ணிக் கொண்டிருந்தார். 'வரவரக் காலம் கெட்டுப் போச்சு. பொம்மனாட்டிகள் நிறையப் படிக்கட்டும், பாஸ் பண்ணட்டும், வேண்டாம் என்று சொல்லவில்லை. டைப் ரைட்டிங்கும் ஷிப் ரைட்டிங்கும் எதற்காக? இவர்களுக்கு இயந்திர சம்பந்தமாக என்ன தெரியும்?' என்றார்."

"படிச்சால் தானாகத் தெரிகிறது."

"தெரியாதாம். நான் ஒரு நாளைக்கு ஆகாயம் ஏன் நீல நிறமா யிருக்கிறது என்று கேட்டேன். அதற்கு அவர் 'நிறையத் தூசி படிந்திருக்கிறது. அந்தத் தூசியினால்தான் அதற்கு வர்ணம் ஏற்படுகிறது' என்று சொல்லிவிட்டு 'நான் சொன்னதை உடனே மறந்துவிடு' என்றார். 'ஏன்?' என்று கேட்டேன். மறக்காவிட்டால் ஆகாயத்துக்குப் போய்த் தூசி போகப் பெருக்கி விட்டு வரக் கிளம்பி விடுவேனாம்!"

"நாம் எது செய்தாலும் அவர்களுக்குப் பரிகாசந்தான்."

● அப்பொழுது பத்திரிகையில் 'ஸ்டான்டர்ட் துணி' என்ற வார்த்தை தென்படவே "ராதை! 'ஸ்டான்டர்ட் துணி' என்று போட்டிருக்கிறதே, அது என்ன?" என்று சீதா கேட்டாள்.

"அது ஒரு துணி. அவ்வளவுதான் எனக்குத் தெரியும். துணி விலை நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறதோன்னோ! அதற்காக 'ஸ்டான்டர்ட் துணி' என்று மலிவாய் விற்கப் போகிறார்களாம். ஆனால் அது சிகப்பா, கறுப்பா, வேஷ்டியா, புடவையா, அதிலே குழந்தைகளுக்கு ஜாக்கெட் தைத்துக் கொள்ளலாமா என்று ஒரு தகவலும் கிடையாது."

"அப்படியானால் விசாரித்துச் சொல்லு; நாளைக்கு வருகிறேன்" என்று சீதா எழுந்து போனாள்.

—"அநஸூயை"

"நாடகக் கலையின் நன்றி"

கலையின் பெருமை அதைக் கையாள்பவர்களின் திறமையைப் பொறுத்து வளர்ச்சி அடைகிறது. அதோடு, அக்கலையும் தன் நன்றி அறிதலாகத் தன்னைச் சிர்பெறச் செய்யும் அக் கலைஞனுக்கு அழியாத பெருமையையும் புகழையும் தேடிக் கொடுத்துக் கொண்டே யிருக்கிறது.

மதுரை தேவி பாலவிநோத சங்கீத சபைத் தலைவர், நாடகக் கேசரி, நாடகக் கலாநிதி, நாடகக் கலையரசு, நவாப் T. S. ராஜமாணிக்கம் நாடகக் கலையை மேன்மையுறச் செய்தார் என்பதற்குப் பலனாக, அக்கலை அன்னாருக்குத் தேடிக் கொடுத்த சில முக்கிய குறிப்புகளை ஞாபகப்படுத்திக் கொண்டால் "கலையின் நன்றி" நன்கு வெளியாகும்.

- **மகாத்மாஜி, ஆர்ச் பிஷப் போன்ற பெரியார்கள் ஆசி அளித்து நற்சாக்ஷி கொடுத்தார்கள்.**
- **மைசூர், திருவனந்தபுரம் போன்ற சமஸ்தான மகாராஜாக்கள், மகா ராணிகள், இளவரசர்கள், திவான்கள் பரிசளித்தார்கள்.**
- **ஒரோர் ஸ்தலத்தின் பொது ஜனங்களும், பிரமுகர்களும், உத்தியோகஸ்தர்களும் கணக்கற்ற சன்மானங்களை வழங்கி வருகிறார்கள்.**
- **சமீபத்தில் 7 - 5 - 43ல் நாகர்கோவில் பயோனிர் பிக்ச்சர் பாலஸ் புரோப் ரைட்டர் ஸ்ரீ S. குமாரஸ்வாமி அவர்களால் ஏழு பவுன்களால் ஆக்கப்பட்ட பால முருகன் பதக்கத்தோடு கூடிய இரண்டு வட தங்கச் சங்கிலி பரிசளிக்கப்பட்டது.**



பூந்தோட்டம்

ஆசிரியர்
ரவீந்திர நாத் டாகுர்
மொழிபெயர்ப்பு
த. நா. குமாரஸ்வாமி



எட்டாம் அத்தியாயம்
நீரஜாவின் குற்றச் சாட்டு

● "ஸரளாவை நீங்கள் விவாகம் செய்து கொண்டிருக்கலாமே"

"அதைத் தான் சொல்லுகிறேன்; கேள்: என்றைக்குமே விவாகத்தைப் பற்றி நான் எண்ணமிட்டதில்லை."

"எண்ணியதில்லையா? இது உங்கள் கவிதை உள்ளத்தின் விளைவாக்கும்!"

"அதை யேன் கேட்கிறாய்? இந்தப் பாழும் காவிய மோகம், உன்னைச் சந்தித்த முதல் நானே என்னைப் பிடித்துக் கொண்டது. அதற்குமுன் நாங்கள் இருவரும் காட்டு மனிதரைப்போல, வனத்தின் நிழலில் அல்லவோ காலங் கழித்தோம். அப்பொழுது எங்களையே மறந்து விடுவோம். நவநாகரிகத்தில் நாங்கள் வளர்ந்திருக்கும் பகுதியில் நிலைமை என்னவாகி இருக்குமோ தெரியாது."

"நவ நாகரிகம் என்ன பிசகு செய்து விட்டது?"

"இக்காலத்து நாகரிகம், துச்சாஸனனைப் போல இருதயத்தை மூடியிருக்கும் துகிலை உரித்துப் பார்க்க முயல்கிறது. அனுபவம் வருவதற்குள்ளாகவே முதிர்ந்த ஞானம் மனிதர்களுடைய கண்களைத் திறந்து விடுகிறது. அவர்களது மோப்ப சக்தி ரொம்பவும் சூக்ஷ்மமானது; பூவின் இதழைப் பிய்த்துக் கொண்டே குறிப்பை உணர்வார்கள்."

"ஸரளா பார்ப்பதற்கு அப்படி ஒன்றும் மோசமாக இல்லையே!"

"ஸரளாவை நான், ஸரளா வென்றே அறிவேன். அவள் அழகா, இல்லையா என்பதை நான் ஆராயவேண்டிய அவசியம் ஏற்படவில்லை."

"சரி, சத்தியமாகச் சொல்லுங்கள். அவள் மீது உங்களுக்கு ஆசை இல்லையா?"

"சத்தியமாக ஆசைதான். அவள் மேல் ஆசை கொள்ளாதிருப்பதற்கு நான் ஜட பதார்த்தமா என்ன? என் சித்தப்பாவின் பிள்ளை ரங்கூனில் பாரிஸ்டராக இருந்தான். அவனைப் பற்றிய கவலை அவருக்கில்லை. ஸரளா பேருக்குத் தோட்டத்தை வைத்துவிட வேண்டுமென்பதே அவர் வாழ் நாள் முழுவதும் கொண்டிருந்த நோக்கம். 'அவள் மனசுக்குத் தெம்பைக் கொடுக்க வல்லது அந்தத் தோட்டமொன்றே. அப்படித் தோட்டத்தைக் கொடுத்துவிட்டால் அவள் விவாகம் செய்து கொள்ள வேண்டிய அவசியமே இராது' என்ற நம்பிக்கை அவருக்கு. அப்புறம், அவர் காலமாகிவிட்டார். திக்கற்றவளானாள் ஸரளா. கடன்காரர் கையில் சிக்கிக் கொண்டது அந்த அழகான புஷ்பவனம். அன்றே முறிந்து போய்விட்டது என் இருதயமும். உனக்கும் தெரியும் இந்த விஷயம்! ஆசை கொள்வதற்குத் தகுதியுடைய வஸ்து அவள். அவள் மேல் நான் என் ஆசை வைக்கக் கூடாது? ஒரு சமயம் அவள் முகத்தில் குதூஹலமும் சிரிப்பும் பொங்கியதை நான் பார்த்திருக்கிறேன். அவள் நடந்து போகும்போது ஒரு பக்ஷி பறந்து செல்லும் அழகைக் காண்பேன். இன்றுதான் அவள் நடமாடுகிறாள்; உள்ளத்தில் பெருஞ் சுமை ஒன்று அவளை அழுத்துகிறது; அதனால் அவள் முறிந்து போய்விடவில்லை. என்னி

டத்தில் ஒரு நாளும் அவன் தன் வேதனையைச் சொல்லிப் பெருமூச் செறிந்ததே இல்லை. அதை வெளிக் காட்ட அவளுக்கு ஒழிவு ஏது? —”

நீரஜா, ஆதித்தியன் பேசுவதைத் தடுத்து “போதும், நிறுத்துங்கள். அவளுடைய புகழை உங்கள் வாய் மூலமாகப் பலதடவை கேட்டு ஆனந்த மடைந்திருக்கிறேன். தெவிட்டுகிறதே எனக்கு. சாமான்யமான பெண் அல்ல அவள். பாராலைத் என்ற ஊரில் பெண்கள் பாடசாலைக்கு ஹெட்மிஸ்டிரஸ் தேவை என்றீர்களே; இவளைச் சிபார்சு செய்யுங்களேன்.”

“என் அந்தமானில் கூடத் தேவையாம்!”

“விளையாட்டல்ல; நிஜமாகத்தான் சொல்லுகிறேன். உங்கள் தோட்டத்தில் ஸரளாவுக்கு எந்த வேலை வேண்டுமானாலும் இடுங்கள், ஆனால் அந்த ‘ஆர்கிட்’ குஞ்ஜத்தை மட்டும் அவள் மிதிக்க வேண்டியதில்லை.”

“என்ன நடந்தது, சொல்லு?”

“இதோ உடைத்துச் சொல்லி விடுகிறேன். ‘ஆர்கிட்’ செடிகளை வளர்க்க ஸரளாவுக்கு அனுபவம் போதாது.”



“நானுந்தான் உனக்கு ஒன்று கூற வேண்டியிருக்கிறது. என்னை விட ஸரளாவுக்கு இந்தச் செடிகளைப் பற்றி அதிகமாகத் தெரியும். சித்தப்பாவுக்கு இந்த ‘ஆர்கிட்’ பேரில்தான் ஷோக்கெல்லாம். இதற்கென்று ஸெலிபிஸ், ஜாவா, என் சைனா போன்ற தூர தேசங்களிலிருந்து கூடப் பலவகையான ‘ஆர்கிட்’ செடிகளைத் தருவித்துப் பயிர் செய்தார்.

இதெல்லாம் நீரஜாவுக்கும் தெரியும். அதனாலேயே அது அவளுக்கு அருவருப்பைத் தந்தது.

“சரி, சரி, என்னை விட அவர்தான் தெரிந்தவர்! — இருக்கட்டுமே; — என் உங்களைக் காட்டிலுங் கூட. அந்த ‘ஆர்கிட்’ குஞ்ஜம் உங்களுக்கும் எனக்கும் சொந்தம். ஸரளாவுக்கு அதில் எந்தவிதமான பாத்யதையும் இல்லை. அதில் அவளுக்கு இந்தத் தோட்டத்தையே எழுதி வைப்பதில் எனக்கு ஆக்ஷேபணையே இல்லை; ஆனால் அற்பமானாலும், எனக்கென்றே தோட்டத்தில் அந்தச் சிறிய பங்கை அர்ப்பணம் செய்துவிடுங்கள். நான் உங்களை யாசிப்பது இது ஒன்றே. நான் இன்று இப்படி படுத்த படுக்கையாகக் கிடப்பது விதியின் கூத்துத்தானே? அதனால் அல்லவோ —”

வார்த்தையை அவள் முடிக்கவில்லை. தலையணையில் முகத்தைக் கவிழ்த்துக் கொண்டு நிலை கலங்கி அழலானாள்.

ஆதித்தியன் திடுக்கிட்டுப் போனான். இதென்ன விபரீதம்! இந்த அழுகை ரொம்ப நாளாக அவள் உள்ளத்தில் குமுறிக் கொண்டிருக்கவேண்டும். அது சீராஜாவின் உள்ளத்தினுள்ளே நாளுக்கு நாள் திரண்டெழுவதை ஆதித்தியன் இமைப்பொழுதாகிலும் தெரிந்து கொள்ளவில்லை!

லரனா, தோட்டத்தைக் கருத்துடன் கவனிப்பதைப் பார்த்து சீராஜா அகமகிழ்வாளென்று அவன் நினைத்திருந்தான். அவன் எவ்வளவு பெரிய முட்டாளாக இருக்க வேண்டும்! முக்கியமாக ருதுக்களுக்குத் தகுந்தவாறு பூம்பாத்திகளை அமைப்பதில் லரனாவுக்கு நிகர் யாருமில்லை என்பது அவனது கொள்கை. இப்போது தான் அவனுக்கு மர்மம் புரிந்தது; செடிகள் விஷயத்தைப்பற்றி லரனா எப்போதாவது தவறான அபிப்பிராயம் கொண்டிருப்பாள். அதையே



சுட்டிச் சுட்டி சீராஜா முன்னே ஓவென்று நகைத்துக் கைகொட்டியது இன்று அவன் ஞாபகத்திற்கு வந்தது. இங்கிலீஷ் புஸ்தகங்களைப் புரட்டி அபூர்வமான சில புஷ்பங்களின் முழுநீளப் பெயரை சீராஜா உருப் போட்டு வைப்பாள். அதன் காரணம் இப்போதுதான் அவன் மூளையில் எறிந்து. ரொம்ப நல்லவன் போல் லரனாவை அவன் குறிப்பிட்ட ஒரு பூவின் பெயர் என்னவென்று வினவுவான். பாவம், அவன் தவறான விடை எதாவது தருவான், அல்லது தெரியாமல் விழிப்பான். ஆகா! அப்போது அலை போல் எழும் சீராஜாவின் சிரிப்பிற்கு ஓர் அளவே இராது. "ரொம்பப் படித்தவன். காஷியா ஜாவானிகா — இந்தப் பெயரை மட்டி ஹலா கூடச் சொல்லி விடுவானே!'' என்று பரிகசிப்பாள்.

வெகு நேரம் ஆதித்தியன் சிந்தையில் ஆழ்ந்திருந்தான். பிறகு சீராஜாவின் கைகளைப் பிடித்துக்கொண்டு, "அழாதே, சீரு. என்னை என்ன செய்யச் சொல்லுகிறாய்? லரனா தோட்டத்தைக் கவனித்துக் கொள்வது உனக்குப் பிடிக்கவில்லையா என்ன?" என்றான்.

சீராஜா தன் கையை வெடுக்கென இழுத்துக் கொண்டு, "எனக்கு என்ன வேண்டியிருக்கிறது? ஒன்றுமில்லை. தோட்டம் உங்களுடையது. யாரை வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்களேன். அதனால் எனக்கு என்ன?" என்றாள்,

"சீரு, இந்த மாதிரி நீ பேசுவாயென்று நான் கனவிலும் நினைக்கவில்லை. என் தோட்டம்! — உன்னுடையதன்றோ? நமக்கு இடையே இந்த மாதிரி வேற்றுமை எத்தனை நாளாக?"

"என்றைக்கு நீங்கள் இந்த உலகத்துக்குச் சொந்தமாகி விட்டீர்களோ, என்று நான் என் அறையின் ஒரு மூலையில் ஒடுங்கிப் போய் விட்டேனோ அன்று தொட்டு! பிராணதீபம் மங்கி வரும் நான் எந்தத் தெம்பின் பேரில் உங்கள் அழகான லரனாவின் முன்னே வந்து நிற்பது? உங்களுக்கும் சேவை புரிந்து தோட்டத்தையும் கவனித்துக் கொண்டிருந்தேனே; அத்தகைய சக்தி இப்போது எங்கேயோ போய்விட்டதே!"

"சீரு! நீ கூட ஒரு சமயம் இஷ்டத்துடன் லரனாவை வரவழைக்க வில்லையா? அவளை யோசனை கேட்டிருக்கிறாய். மறந்து போய் விட்டாயா என்ன? சில வருஷங்களுக்கு முன் நீங்கள் இருவரும் கலந்து யோசித்து படேவியா ஆரெஞ்சுச் செடியையும், கொலம்பா கிச்சிலியையும் ஒட்டுப் போட்டு என்னைத் திக்பிரமிக்கச் செய்தீர்களே!"

"அப்போதெல்லாம் அவளுக்கு இவ்வளவு தலைக் கிறுக்கு இருந்ததில்லை. பகவான்தான் என் வாழ்வை இருளடையச் செய்து விட்டானே. உங்கள் வாயாலேயே சொல்லி விட்டீர்கள், 'அவளுக்குத் தெரியாத விஷயமே கிடையாது. ஆர்கிடைப் பற்றி என்னைவிட அவளே அதிகம் அறிவாள்' என்று. முன்பெல்லாம் இந்த மாதிரி நீங்கள் சொன்னதாக ஞாபகமில்லை. என் போதாத காலமா, இன்று நீங்கள் எங்கள் இருவரையும் இப்படி ஒத்திட்டுப் பார்க்க

வேண்டும்! அவனோடு போட்டி போட என்னால் ஆகுமா என்ன? எந்த விதத்தில் நான் அவளுக்கு ஈடாவேன்?"

"நீரு, இன்று இந்த மாதிரியெல்லாம் நீ பேசுவாயென்று நான் எதிர்பார்க்கவே இல்லை. நீரு பேசுவதாகத் தோன்றவில்லை. யாரோ மாதிரியாகப் பேசுகிறாயே!"

"வேறு யாரும் இல்லை. அதே நீருதான் பேசுகிறாள். அவளை இதுவரையில் நீங்கள் புரிந்து கொள்ளவில்லை. இதுவே எல்லாவற்றையும் விடப் பெரிய தண்டனை எனக்கு. விவாகத்திற்குப் பிறகு, உங்கள் உயிரைப் போல் அவ்வளவு உயர்வாக இந்தப் பூந்தோட்டத்தைப் பாவித்த நான் முதலாக எனக்கும் அதற்கும் இடையே துளியேனும் நான் பேதத்தைக் காணவில்லை. இல்லாமற் போனால் உங்கள் தோட்டத்தின்மீது எனக்கு வெறுப்பு உண்டாயிருக்குமே! அவளைச் சகித்துக் கொண்டிருப்பேனா? அவள் என் சக்களத்தியாக அல்லவோ மாறிவிடுவாள்? இரவும் பகலும் நான் தோட்டத்தைக் கட்டிக் கொண்டு சிரமப்பட்டது உங்களுக்குத் தெரியும். நான் எவ்வளவு ஆர்தரீகமாக வைத்துக் கொண்டிருந்தேன் அவளை? வித்தியாசமின்றி நானும் அவளும் இருந்தோம் ஒரு சமயத்தில்."

"எனக்குத் தெரியாதா என்ன? எல்லாம் என் பொருட்டு நீ —"

"அதை எடுப்பானேன்? இதோ கண்ணாலேயே பார்க்கிறேன், அந்தத் தோட்டத்தை வேறு ஆசாமி சுலபமாகப் பிடித்துக் கொண்டு ஆட்சி செலுத்துவதை. அந்தத் தோட்டம் என் உடல் அல்லவா? நான் மட்டும் இருந்தால் இந்த மாதிரியா செய்வேன்?"

"என்ன செய்திருப்பாய்?"

"என்ன செய்திருப்பேனா? தோட்டந்தான் அழிந்து பாழாகத்தான் போய் விடட்டுமே. வியாபாரம் திவாலாகத் தான் போகட்டுமே. ஒருவருக்குப் பத்துபேர் வேலையாட்களை வைத்துச் சீர்திருத்தமாட்டேனா! ஆனால் ஒரு போதும் எந்தப் பெண்ணையும் என் காரியத்தில் நுழையவிடமாட்டேன்; அதுவும் இறுமாப்புப் பிடித்தவர்களை, என்னை விடத் தோட்ட வேலை ரொம்பவும் தெரியுமென்று கர்வங் கொண்டவர்களை அண்டவிட மாட்டேன். அந்த மாதிரி ஒருத்தியைத் தூக்கிவைத்து என்னை நித்தியம் அவமானப் படுத்துங்களேன். யமன் என் தலைமாட்டண்டை வந்து காத்துக் கொண்டிருக்கிறான். எனக்குள்ள சக்தியைக் காட்ட இப்போது வழி இல்லை. இந்த மாதிரியெல்லாம் என் ஆகவேண்டும், சொல்லட்டுமா?


"சொல்லேன்."

"என் மேல் இருப்பதை விட அவளிடத்தில்தான் உங்களுக்கு ஆசை அதிகம். இதுவரை அதை ஒளித்து வைத்திருந்தீர்கள்."


ஆதித்தியன் தன் தலைமயிருக்குள் கையைப் பொத்திக் கொண்டு சிறிது நேரம் ஒரே நிலையில் உட்கார்ந்திருந்தான். அதற்குப் பின் இளகின குரலில் பேச ஆரம்பித்தான்!

"நீரு, பத்து வருஷ காலமாய் என்னோடு பழகி இருக்கிறாய். கஷ்டம், சுகம் எல்லா வித நிலையிலும் இருந்தும் நீ இன்று இந்த மாதிரி பேசுகிறாய்! இதற்குப் பதில் சொல்ல எனக்குத் தெரியவில்லை. நான் போகிறேன். கிட்ட இருந்தால் ஏதாவது பேச்சுக்கு இடம் உண்டாகும். அதனால் உன் உடம்புக்கும் கஷ்டம் நேரிடும். 'பர்னரி' (பச்சிலை வீடு) பக்கத்தில் ஜப்பானிய ரீதியில் அறையொன்று கட்டியிருக்கிறேனே அங்கேதான் இருப்பேன். என்னைக் காணவேண்டுமானால், அந்த இடத்திற்கு ஆள் அனுப்பு."

(தொடரும்)



கம்பர் தரும் காட்சி



டி.கே.சி.

44. கைகேசியே நல்லவள்!

அயோத்தியை விட்டு வெளியே வந்ததே பெரிய காரியமாகத் தோன்றுகிறது ராமனுக்கு. அதிலும், இரண்டு யோசனை தூரம் எட்டி வந்தது பற்றி எக்களிப்புத்தான். பர்ண சாலையில் முனிவர்களோடு உத்ஸாகமாகப் பேசிக் கொண்டிருக்கிறான். இரவு பத்து மணியிருக்கும். வெளியே எட்டிப் பார்த்தான். அயோத்தி ஜனங்கள் ஆண், பெண், குழந்தைகள் எல்லாருமாக வந்து பர்ண சாலையின் சுற்றுப் புறமெல்லாம் தங்கி விட்டார்கள். அவர்களுக்கு ஆகாரம் ஒன்றுமில்லை, அப்படியே படுத்துக் கொண்டார்கள். சிறிது நேரங் கழித்து உறங்கியும் விட்டார்கள். பார்த்தான் ராமன்: "இது என்னடா சங்கடமாக இருக்கிறது? ஜனங்கள் எல்லாம் தொடர்ந்து வந்து விட்டார்களே! இனியும் தொடர்ந்து வர அல்லவா பார்க்கிறார்கள்?" என்று எண்ணித் தேர்ப்பாகனும் மந்திரியுமாகிய சுமந்திரனை மென்ன ரகசியமாய்க் கூப்பிட்டான். "அப்பா, உன்னிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டியிருக்கிறது. நீயோ எல்லாம் தெரிந்தவன். நான் சொல்லுகிறபடி, நீ செய்ய வேண்டும். பார்த்தாயா இந்த ஜனங்களையெல்லாம்? அவர்களுடைய அன்பு எப்படியிருக்கிறது என்று தெரிகிறதா உனக்கு! நான் இந்த இடத்தை விட்டுப் புறப்பட்டேன் என்றால் அவர்களும் தொடர்ந்துதானே வருவார்கள்? எவ்வளவு பொல்லாத காரியம் அது!" என்று கூறி, அவர்களைத் தடுப்பதற்கான ஒரு யோசனையும் செய்கிறான்.

'பூண்டபேர் அன்பினு ரைப்
போக்குவ(து) அரி(து);போக்
கா(து)
சண்டுநின்(று) ஏகல்பொல் லா(து);
எந்தைநீ இரதம்இன் னே
தூண்டினை மீள்க! ஆண் டுச்
சுவட்டைஓர்ந்(து)
என்னைஆங் கே
மீண்டனன் என்னமீள் வர்,
இதுநின்னை வேண்
டிற்(று)' என் றான்.

[பூண்ட பேர் அன்பினுரை: நிலையான பேரன்புடைய இவர்களை; போக்காது சண்டு நின்று ஏகல் பொல்லாது: ஊருக்குத் திரும்பிப் போகச் செய்யாமல் இங்கிருந்து நான் புறப்பட்டுப் போவது கொடுமையான காரியம்; எந்தை நீ: என்னப்பனே; இரதம் இன்னே தூண்டினை மீள்க: இரதத்தை இப்பொழுதே செலுத்தித் திரும்புவாயாக (அயோத்தியை நோக்கி); ஆண்டுச் சுவட்டை ஓர்ந்து: அது காரணமாகத் தேர்ச் சக்கரத்தின் தடத்தை அறிந்து கொண்டு; என்னை ஆங்கே மீண்டனன் என்ன மீள்வர்: நான் அந்த வழியாகவே அயோத்திக்குப் போய் விட்டேன் என்று எண்ணித் திரும்பி விடுவார்கள்.]

ராமன் லகுவாகச் சொல்லிவிட்டான், சுமந்திரனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. எப்படித் தேரைத் திருப்பிக் கொண்டு போவது? தசரதர் முகத்தில் எப்படி விழிப்பது? அவரிடத்தில் என்னத்தைச் சொல்ல! என்று ஒரே யடியாய்த் திணறுகிறான்.

"சீதையும் தம்பியும் தொடர ராமனைப் புஷ்பம் நிறைந்த அழகிய காட்டுக்குள் போக விட்டு விட்டேன் என்று சொல்லவா நான்?" என்று அலறுகிறான்.

'தேவியும் இளவலும்
தொடரச், செல்வனைப்
பூவியல் கானகம்
புகஉய்த் தேன் என்கோ!

கோவினை உடன்கொடு
    குறுகி னேன் என்கோ !

யாவது கூறுகேன்
    இரும்பின் நெஞ்சினேன்.'

[செல்வனை : ராமனை ; பூவியல் கானகம் : அடடா, ராமன் போன காடுதான் என்ன அழகு ! ஒரே புஷ்பமயம் ; கோவினை உடன் கொடு குறுகினேன் என்கோ : ராமனைக் கூடவே அழைத்து வந்து விட்டேன், பாருங்கள் ! என்று சொல்லட்டுமா ? — சொல்லு ராமா !]

மேலும் சொல்லுகிறான் சுமந்திரன் : "புஷ்பத்திலுள்ள இதழ்களைச் சேர்த்துப் பரப்பினாலும் ஐயோ, சீதையின் பாதங்களில் உறுத்துமே !

தாருடை மலரினும்
    ஒதுங்கத் தக்கிலா
வாருடை மயிலொடு
    மதுகை மைந்தரைப்
பாரிடை செலுத்தினேன்
    பழைய நண்பினேன் ! —
தேரிடை வந்தனன்,
    நீடி லேன்,என்கோ ?

[தாருடை மலரினும் : ஒட்டித் தைத்த பூவிதழ் மேலும் ; ஒதுங்கத் தக்கிலா : நடக்க முடியாத ; வாருடை மயிலொடு : சீதையோடும் ; மதுகை மைந்தரை : வலிமையுள்ள ராம லக்ஷ்மணர்களை ; பாரிடைச் செலுத்தினேன் : பூமியில் நடக்க விட்டேன் ; — யார் ? பழைய நண்பினேன், தேரிடை வந்தனன் நீடிலேன் : தேரிலேயே வந்து விட்டேன் எனக்கு ஒரு கஷ்டமுமில்லை ; என்கோ : என்று சொல்லவா !]

நான் என்ன ! ஈவிரக்க மற்றவன், அறிவில்லாதவன், ஆம் வஞ்சனைக்கும் ஆனானவன் ! உடலும் உயிரும் உடைகிற நிலைமையில் இருக்கிற சக்கரவர்த்தியிடம் போய் நீ சொன்னதைச் சொல்லவா ? ரொம்ப அழகு !

வன்புலக் கல்மன
    மதியில் வஞ்சினேன்
என்(பு)உலப் புறஉடைந்(து)
    இரங்கு மன்னன்பால்
உன்புலக்(கு) உரியன
    உணர்த்தச் செல்கேனோ ? —
தென்புலக் கோமகன்
    தூதில் செல்கேனோ ?

[வன்புலக் கல்மனம் : உணர்ச்சியாதுமில்லாத கல்மனம் ; மதியில் வஞ்சனேன் : அறிவில்லாதவன் நான், வஞ்சகனுங் கூடத்தான் ; என்பு உலப்புற : உடல் நைந்து ;கரையும்



படி : இரங்கும் மன்னன்பால் : வருந்துகிற சக்கரவர்த்தியிடம் ; உன்புலக்கு உரிய சொல் : உன் அறிவுக்கு ஏதோ ஒத்தவாறாகத் தோன்றுகிற சொல்லை ; உணர்த்தச் செல்கேனோ : தெரியப்படுத்து வதற்காகத் தேரில் போகவா நான் ? தென்புலக் கோமகன் தூதில் : தென் திசையிலுள்ள எமனின் தூதனாக.]

அக்கினி வளர்த்து, அதை யொட்டிய வேள்வி எல்லாம் செய்து உன்னை அருமையாய்ப் பெற்றார் உன் தந்தை. அவரிடம் போய் உன் அருமை மைந்தன் ராமன், காட்டுக்குப் போய் விட்டான் என்று நான் சொல்லவா ?

அங்கிமேல் வேள்விசெய்(து)
    அரிதில் பெற்றநின்
சிங்கஏ(று) அகன்ற(து)என்(று)
    உணர்த்தச் செல்கேனோ ?
எங்கள்கோ மகற்(கு)இனி
    என்னில்,— கேகயன்
நங்கையே கடைமுறை
    நல்லன் போலுமால் !''

[எங்கள் கோமகற்கு : எங்கள் தசரத சக்கரவர்த்திக்கு ; என்னில் : என்னைவிட ; கேகயன் நங்கையே : கைகேயியே ; கடைமுறை நல்லன் : யாதொரு சந்தேகமுமில்லாமல் நல்லவள்.]

சுமந்திரனது நிலையில் நம்மைக் கொஞ்சம் வைத்துப் பார்க்க வேண்டும். திரும்பி எப்படிப் போக முடியும் அயோத்திக்கு ? வேறு எங்கேயாவது தலைக் கெட்டாத தூரத்துக்குப் போய்த் தொலையவே தோன்றும். அத்தகைய நிர்ப்பந்தம் நமக்கு நேரிடவில்லை அல்லவா என்று எக்களிப்புக் கொள்ளவே தோன்றுகிறது. அவ்வளவு பரிதாப நிலையிலிருக்கிறான் சுமந்திரன்.

வாழையடி வாழையாக வந்த பழக்கம்



இந்தியாவிலே இரண்டு பெரிய பாரம்பரிய சொத்துக்கள் உண்டு. ஒன்று கலை, மற்றொன்று அதிதி உபசாரம். இவ்விரண்டும் வாழ்வின் இன்பத்தோடு பின்னிக் கிடக்கின்றன. சோழர் காலத்து சிற்பங்களை நாம் பார்க்கும்பொழுது நமக்கு மனதில் எழும் ஒரு இன்ப உணர்ச்சி நாம் நமது நண்பர்களுக்கு தேயிலைப் பானம் கொடுக்கும்பொழுது உண்டாகிறது. அதிதி உபசாரத்துக்கு தேயிலைப் பானத்தைத் தவிர வேறு சிறந்தது எது? எந்த நேரத்தில் யார் வந்தாலும் சிறிது நேரத்தில் தயார் செய்யக் கூடியது அதுவே. உங்கள் பாரம்பரிய பழக்கத்தை மறக்கவேண்டாம். வீட்டுக்கு விரும்பி வந்தோரை தேயிலை கொடுத்து மனங்குளிரச் செய்யுங்கள்.

★

"நித்திய கர்மா" என்ற எங்கள் புது சித்திரங்களுடன் கூடிய புத்தகம் எந்தெந்த நேரத்திலெல்லாம் தேயிலை பானம் பருகலாம் என்பதைப்பற்றி விவரிக்கிறது. இந்த விளம்பரத்தைக் கத்தரித்து உங்கள் பெயர் விலாசம் முதலியவற்றுடன் கீழ்கண்ட விலாசத்துக்கு அனுப்பவும். இந்தியத்தேயிலைக் கமிஷனர், இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டு, தபால் பெட்டி நெ. 2172, கல்கத்தா.



குடும்பத்துக்கு ஏற்ற ஒரே பானம்



இந்தியத் தேயிலை

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது. I K 204



ஆனந்தமாக லிப்டன் தேனீர் அருந்தும்போது பொறுப்பற்ற பேச்சுக்களைப் பேசாதீர்கள்.

★ பத்மஜா தன் அகன்ட கண்களால் என்னைக் கூர்ந்து நோக்கினாள்; அவள் கண்களில் கண்ணீர் துளித்தது. "அம்மாஞ்சி! என் மனசு உனக்கு நன்றாய்த் தெரியும்...."

பத்மஜாவின் பரிசு

கிணஜா

1

● பொழுது விடிந்தால், பால கோபாலனின் (என் குழந்தை) ஆண்டு நிறைவுக் கல்யாணம். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் வெகு ஜரூராக நடந்து கொண்டிருந்தது. "தட்டானும் மேளக்காரனும் சொன்னபடி வந்து விடுவார்களா?" என்ற யோசனையில் ஆழ்ந்திருந்தார் என் மாமனார். "நாளை இலைக்குப் போட என்ன பட்சணம் செய்வது?" என்ற கவலை என் அம்மாவைக் குழப்பிக் கொண்டிருந்தது. "நவநாகரிகமாகப் பையில் போட்டு வெற்றிலை பாக்கைக் கொடுப்பதா? அல்லது பழைய நாள் வழக்கப்படி தட்டிலேயே வைத்துக் கொடுத்துவிடலாமா?" என்ற யோசனையில் ஆழ்ந்திருந்தாள் என் மாமியார். பெட்டியிலுள்ள புடவைகளையெல்லாம் பரப்பிக்கொண்டு "நாளைக்கு எந்தப் புடவையைக் கட்டிக் கொள்ளலாம்" என்ற விஷயத்தில் முடிவு தெரியாமல் திண்டாடினாள் என் மனைவி. என் மனமோ, பத்மஜாவின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்தது. அன்று மாலை ஆறரை மணி வண்டியில்தான் பத்மஜாவும் அவள் கணவனும் வருகிறார்கள். பத்மஜாவைப் பற்றி நான் நினைத்தது என்ன? நடந்தது என்ன? பல வருஷங்களுக்கு முன் நடந்த சம்பவங்களின் நினைவால் என்னை மறந்தேன்.

என்று என் அத்தை வயிற்றில் பத்மஜா பிறந்தாளோ, அன்றே அவளை என்னுடையவளாகக் கருதினேன். இதற்குக் காரணம் என் அப்பாவும், அத்தையும் அடிக்கடி எங்கள் விவாக விஷயமாய்ப் பேசிக் கொண்டதுதான். ஒரு வயதுக் குழந்தையான பத்மஜாவின் பொக்கை வாய்ச் சிரிப்பில் என்னை மறந்து மகிழ்ந்து போவேன். தன் சின்னஞ் சிறு விரலை வாயில் வைத்துக் கொண்டு எச்சில் ஒழுக, 'களுக்' 'களுக்' கென்று சிரிக்கும் அந்தச் சிரிப்பில்தான் என்ன வசிகரம்? பத்மஜா நடக்கத் தொடங்கின அன்றே அவளைக் கையைப் பிடித்து மெள்ள என் வீட்டிற்கு அழைத்து வந்து விடுவேன். பத்மஜா வளர வளர, நான் அவளிடம் வைத்துள்ள அன்பும் வளர் பிறைபோல் வளர்ந்தது.

பத்மஜாவும் நானும் சேர்ந்துதான் பள்ளிக்கூடம் போவோம்; சாப்பிடுவதும், படிப்பதும், விளையாடுவதும் ஒன்றாகத்தான். பத்மஜாவுக்குத் தெரியாத பாடங்களை, நான் அவளுக்குக் குதூகலத்துடன் சொல்லிக் கொடுப்பேன். பத்மஜாவை யாராவது வைதுவிட்டால், நான் உடனே அவர்களுடன் சண்டைக்குப் போய்விடுவேன். என்னை யாராவது வைதுவிட்டால், பத்மஜா 'கோ' வென்று அழுது விடுவாள். நகமும் சதையும் போன்று நாங்கள் இணை பிரியாமல் வளரலானோம்.

என் தகப்பனார், போலீஸ் டிப்டி சூப்ரண்டெண்டு; நான் அவருக்கு ஒரே பிள்ளை. என் அத்தை புருஷரும் எங்களுக்குக் குறைந்தவரல்ல. அவருக்கும் சுமார் லட்ச ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் இருந்தன. பத்மஜா அவள் தங்கை வனஜா இருவரையும் இரு கண்களாகவே எண்ணினார். எங்கள் பங்களா அடுத்தடுத்து இருந்தன.

படிப்பிலும் நாங்கள் இருவரும் தான் முதல் மார்க்கு வாங்குவோம். பத்மஜாவின் பதினைந்தாவது வயதில், அவள் எஸ். எஸ். எல். சி. யையும், என் இருபதாவது வயதில் நான் பி. ஏ. யையும் எட்டிப் பிடித்தோம். அந்த வயதில் எங்கள் இரு உள்ளங்களிலும் நிறைந்த அன்பானது தெய்விகக் காதலாகப் பரிமளித்ததது. எவ்வித இடைஞ்சலுமின்றி வளர்ந்த எங்கள் அன்பிற்கு விதி சதி செய்யுமென்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

2

● என் தகப்பனாரின் முகத்தில் தோன்றிய ஒரு சிறு பருவின் காரணமாக அவர் படுத்த மூன்றாம் நாள் எமனுலகை யடைந்தார். திடீரென்று ஏற்பட்ட இந்த அதிர்ச்சியால் இரு குடும்பங்களும் நிலை கலங்கிவிட்டன. என் தகப்

பனார் இருந்தவரை, அவரது சம்பாத்தியம் முழுவதையும் குடும்ப டாம்பீகச் செலவே விழுங்கி விட்டபடியால் அவரது அகால மரணத்திற்குப் பின் மிஞ்சியது, நாங்கள் வசித்த பங்களா ஒன்றுதான்! ஆகவே மற்றெல்லாச் செலவுகளுக்கும் என் அத்திம்பேரின் ஆதரவையே நாடவேண்டியதாயிற்று. அவர் உத்தரவுப்படி, என் படிப்பும் அவ்வருஷத்துடன் முடிவடைந்தது. வேலைக்காகப் பல மனுக்களை எழுதிக் குவித்தேன். கொஞ்ச நாட்களில் என் அத்திம்பேரின் பலமான சிபார்சின் பேரில் போஸ்டல் டிபார்ட் மெண்டில் உத்தியோகமும் பெற்றேன். பத்மஜா விஷயத்திலும் விதி தாட்சண்யம் காட்டவில்லை. வயதாகி விட்ட காரணத்தால் அவள் படிப்பும் நிறுத்தப்பட்டு அத்திம்பேரால் பல கட்டுப்பாட்டு உத்தரவுகளும் பிறப்பிக்கப் பட்டன! அத்திம்பேரும் முன் போல எங்கள் வீட்டிற்கு அடிக்கடி வருவதில்லை. அத்துடன் வீட்டை விட்டே கிளம்பாதவர் பல ஊர்களுக்கும் போக ஆரம்பிக்கவே, எனக்கு எல்லாம் விளங்காத மர்மமாகவே இருந்தது!

நாட்கள் பறந்தன. வழக்கம்போல் ஆபீஸுக்குப் புறப்பட்ட நான் என் பங்களா கேட்டைத் தாண்டு முன், வேகமாக வந்த ஒரு சிறு கார் என் பங்களாவைத் தாண்டி அடுத்த பங்களா வாசலில் நின்றது. அதிலிருந்து என் அத்திம்பேரும், ஒரு வாலிபரும், அவரைத் தொடர்ந்து ஒரு வயதான ஸ்திரீயும் இறங்கி பங்களாவுக்குள் சென்றார்கள். அன்று மாலை அத்தை வீட்டிற்குப் போய்விட்டு வந்த என் அம்மாவிடம் மெள்ள, "அத்தை யாத்தில் என்ன விசேஷம் அம்மா? காலையில் வந்தவர்கள் யார்?" என்று ஆவலுடன் கேட்டேன்.

"யாரோ கலெக்டர் ஸ்ரீனிவாஸனாமே! அவர் மனைவியும், பிள்ளையும் பத்மஜாவைப் பார்ப்பதற்காக வந்தார்களாம்" என்று வருத்தத்துடன் கூறினாள் என் தாய். என் மனம் துணுக்கற்றது. "பத்மஜாவை எதற் கம்மா அவர்கள் பார்க்க வருவது!" என்ற பைத்தியக்காரத்தனமான கேள்வியொன்றைக் கேட்டேன்.

"கலியாணத்திற்கு நிற்கும் பெண்ணை எதற்காகப் பார்க்க வருவார்கள்? பையனுக்கும் பத்மஜாவைப் பிடித்து விட்டதாம். உம்! உன் அப்பா இருந்தால் இப்படியெல்லாம் நடக்குமா?" என்று சொல்லும் பொழுதே என் அம்மாவின் கண்களில் கண்ணீர் துளித்தது.

எல்லா மர்மங்களும் இப்போது எனக்கு விளங்கிவிட்டன! அம்மாவின் மூலம் மேலும் நடக்கப் போகிற விஷயங்களையும் அறிந்து கொண்டேன்.

கலெக்டர் பிள்ளைக்கும், பத்மஜாவிற்கும் விவாகத்திற்கான முகூர்த்த நாளும் குறிப்பிட்டாய்விட்டது. தந்தையின் அகால மரணத்தால், நான் ஏழையாகி விட்டேன். அதுவே என் பத்மஜாவை இழக்கப் போவதற்குக் காரணம். என் அத்தை இந்த ஏற்பாட்டிற்குச் சம்மதிக்கவில்லை? அதன் காரணமாகத் தம்பதிகட்குள் பேச்சு வார்த்தை கூட நின்று விட்டதாகத் தெரிந்தது.

என் அத்திம்பேரின் முரட்டுப் பிடிவாதம் எத்தகையது என்பது எனக்கு நன்றாய்த் தெரியும். ஆனால் பத்மஜாவின் பரிசுத்தமான காதலே எனக்குச் சற்றுத் தைரியமளித்தது. ஒரு துண்டுக் காகிதத்தில், தோட்டத்தில் மகிழ மரத்தடியில் என்னைச் சந்திக்கும்படி எழுதி அதை ஒரு புஸ்தகத்தில் வைத்து பத்மஜாவிடம் கொடுக்கும்படி அனுப்பினேன்.

இரவு மணி ஒன்பது; தோட்டத்துக் கேட்டைத் தாண்டிக் குதித்து மகிழ மரத்தடியை அடைந்து, பத்மஜாவின் வருகைக்காகக் காத்திருந்தேன். பால் போன்ற நிலவில் காதில் டோலாக்குகள் மின்ன வனமோகினி போல் வந்து நின்ற பத்மஜாவைக் கண்டதும், என் உள்ளத்தில் பொங்கும் ஆசையைக் கட்டுப்படுத்த முடியாதவனாய், சட்டென அவள் கையைப் பற்றப் போனேன்.

ஆனால் அவள் கையைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டே, "என்ன அம்மாஞ்சி! எதற்காக என்னை இங்கே கூப்பிட்டாய்?" என்றாள்.

"என் வாழ்க்கைக்கு இன்பமோ, துன்பமோ இரண்டிலொன்றை முடிவு செய்வதற்காக, பத்மஜா! உன் தந்தையின் பணத்தாசை எவ்வளவு கேவலமாகப் போகும் என்று தெரிந்து கொள்வதற்காக."

"அவரென்ன செய்வார்? யாரும் தன் குழந்தையை நல்ல இடத்தில் கொடுக்க விரும்புவது சகஜந்தானே?" என்றாள் பத்மஜா.

"ஓஹோ!" என்று ஒரே வார்த்தையில் பதில் சொன்னேன்.

"அம்மாஞ்சி! கோபித்துக் கொள்ளாதே. என்னவோ அப்பாவின் புத்தி இப்படிக் கெட்டுப் போயிருக்கிறது. அவர் விரும்புவதெல்லாம், தன் பெண் உயர்ந்த அந்தஸ்தில் இருக்க வேண்டுமென்பதுதான்."

"நீ அப்பாவுக்காக வக்காலத்துப் பேச வந்தாயாக்கும்? பத்மஜா! இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருக்க நான் வரவில்லை. உன் முடிவு என்ன என்பதைத்தான் அறிய விரும்புகிறேன்."

பத்மஜா தன் அகண்ட கண்களால் என்னைக் கூர்ந்து நோக்கினாள்; அவள் கண்களில் கண்ணீர் துளித்தது. "அம்மாஞ்சி! என் மனசு உனக்கு நன்றாய்த் தெரியும். நாவல்களில் வருவது போல் நான் கிணற்றில் விழுந்து உயிரை விட்டு விடப் போவதில்லை! ஆனால், அதற்காக நான் மௌனமாக இருக்கவும் போவதில்லை! கலியாண தினம் வரையில் அப்பாவிடம், 'வேறொருவருக்குக் கொடுத்தால் நீங்கள் என் முகத்தில் சந்தோஷத்தையே பார்க்க முடியாது' என்று சொல்லிக் கொண்டுதான் இருப்பேன். அப்படியும் அப்பாவின் மனம் மாறாவிட்டால் என் விதியை நொந்து கொண்டு, அவர் இஷ்டத்தைப் பூர்த்தி செய்வதுதான் என் கடமை" என்று பத்மஜா மேலும் சொல்வதற்குள் நான் போவதற்காக இரண்டடி பின்னுக்கு நகர்ந்தேன். என் மனம் கொதித்தது. "உனக்கும் பணத்தாசை பிடித்து விட்டது என்பதைச் சொல்லி விடுகிறதுதானே? அதை விட்டு எதற்கு இந்தப் பிரசங்கமெல்லாம்?" என்று கூறும்போதே என் உதடுகள் கோபத்தால் துடித்தன!

என் கோபத்தைக் கண்டு பத்மஜா நடுங்கினாள். பதுமைபோல் நின்ற அவளது உதடுகள் லேசாக அசைந்தன. கெஞ்சும் குரலில், "அம்மாஞ்சி!......" அதற்கு மேலும் அவள் சொன்னதைக் கேட்க நான் அங்கு இருந்தால்தானே!



3

அன்று இரவு முற்றும் என் மனம் சஞ்சலத்தால் தவித்தது. மறு நாள் நான் ஆபீஸுக்குப் போனதும், முதலில் என் கண்களில் பட்டது, 'பெரியாற்றுக்குப் போகிறாயா?' என்று தலைமை ஆபீஸிலிருந்து வந்திருந்த சுற்று அறிக்கையே. நான் போவதாகத் தலைமை ஆபீசுக்குத் தந்தி கொடுத்தேன். உடனே புறப்படும்படி வந்த உத்தரவையும் பெற்றுக்கொண்டு வீடு வந்தேன். "அம்மா! என்னைப் பெரியாற்றுக்கு மாற்றி விட்டார்கள்! நாளைக் காலைக்குள் சாமான்களெல்லாம் கட்டிக்கொண்டு புறப்படத் தயாராய் இரு" என்று உத்தரவிட்டேன்.

அம்மா கலவரத்துடன் என்னைப் பார்த்தாள். "என்னடா இது! குழந்தை கலியாணமும் அதுவுமா? ஒரு வாரம் லீவுக்கு எழுதேண்டா!" என்றாள்.

"குழந்தை கலியாணமாவது, கோட்டான் கலியாணமாவது! நீ வேண்டுமானால் உன் நாத்தனாருக்கு ஒத்தாசையாக அப்பளம் இட்டுக் கொண்டிரு! நான் நாளைக்குப் புறப்படப் போகிறேன்" என்றேன்.

அம்மா கொஞ்ச நேரம் வரை பேச வில்லை. பிறகு மெள்ள என்னிடம் வந்து, "என்னடா ஜம்பு! வள் வள்ளுனு விழுகிறாயே! அவர் நமக்கு எவ்வளவோ உபகாரம் செய்திருக்கார்! இன்னமும்......" என்பதற்குள், நான், "வேண்டாம், அவர் உதவி யில்லா விட்டால், நான் செத்துப் போயிருக்க மாட்டேன்! உனக்கு நான் வேண்டு மென்றால் வா; இல்லாவிட்டால் நலங்கு, ஊஞ்சல் பார்த்துக் கொண்டு குசாலாய் இரு! உனக்காக அவர்கள் வீட்டில் வாழை மரத்தைக் கட்டிக்கொண்டு நிற்க நானும் ஒரு முட்டாளல்ல!" என்று சொல்லி விட்டேன்.

அம்மா கண்ணைத் துடைத்துக் கொண்டு, சாமான்களைக் கட்டத் துடங்கினாள். மறுநாள் அதிகாலையே நாங்கள் புறப்பட்டு விட்டோம்.

காலை ஆறு மணிக்கு மதுரையி லிருந்து புறப்பட்ட கார், மாலை மூன்று மணிக்குக் குமிழியை அடைந் தது. அலை மோதிக் கொண்டு சுருள், சுருளாக வந்து விழும் அருவியின் சில்லென்ற திவலைகள் முகத்தில் தெளிக்கவும் என் மனக் கொதிப்புச் சற்று அடங்கிற்று. டிபனை முடித்துக் கொண்டு, அவ்விடம் விட்டுப் புறப் பட்டு ஆறு மணிக்குப் பெரியாற்றை அடைந்தோம். மலைமேலுள்ள ஒரு சிறு குன்றில் போஸ்டாபீஸும், அதைச் சுற்றிலும் மற்றச் சிப்பந்திகளுக்கு வீடு களும், அக் குன்றைச் சுற்றிக் கொண்டு ஓடும் பெரியாற்றின் தோற்றமும் கண் கொள்ளாக் காட்சியாக இருந்தன.

நான் அந்த மலையில் கிட்டத் தட்ட ஐந்து வருஷங்களைக் கழித்து விட் டேன். அம்மாவும் அவளால் முடிந்த வரை என்னை அங்கிருந்து கிளப்பப் பிரயத்தனப் பட்டாள். நான் அசைந் தால்தானே? என் வாழ்க்கை முழுதும் பிரம்மசாரியாகவே கழிக்கத் தீர்மா னித்தேன். ஆனால் கடைசியாக மகிழ மரத்தடியில் சிலைபோல் நின்ற பத்மஜாவின் உருவை மட்டும் மறந்தவ னல்ல. பாவம், அவளை அன்று தான் முதன் முதலாகவும், கடைசியாகவும் என் சொல்லம்புகளால் தாக்கினேன். நாட்கள் செல்லச் செல்லப் பத்மஜா வின் மேலிருந்த கோபமெல்லாம் அனு தாபமாக மாறியது. ஆனால், என் அத்தை புருஷர்மேல் எனக்கேற்பட்ட கோபம் மட்டும் தணியவேயில்லை. அவ ரிடமிருந்து எனக்கு வந்த கடிதங்களை யெல்லாம் படிக்காமலே கிழித்தெறிந் தேன். இது என் அம்மாவுக்குத் தெரி யாது! அவர்களும் தன்னைக் கைவிட்டு விட்டதாகவே எண்ணிக் கண்ணீர் வடிப்பாள் என் அம்மா.

ஒரு நாள் போஸ்ட் மாஸ்டர் "தஞ்சையி லிருந்து உங்களுக் கொரு தந்தி வந்திருக்கு, ஸார்!" என்று சொல்லிக் கொண்டே என் மேஜை மேல் தந்தியை வைத்தார். நான் ஆச்சர்யத்துடன் தந்தியைப் படித்தேன், அதில் பத்மஜா என்னைப் பார்க்க விரும்புவதாகவும், உடனே புறப்பட்டு வரும்படியும், பத்மஜாவின் கணவனே தந்தி கொடுத்திருந்தான். என் உடம்பு முற்றும் குப்பென்று வியர்த்தது; விஷயத்தை அம்மாவிடம் சொன்னதும், அவள் கோவென்று அழுதே விட்டாள். "நான் வளர்த்த குழந்தேடா! அவ ளுக்கு என்ன உடம்போ என்னவோ! உடனே லீவுக்குத் தந்தியடி" என்று அவசரப் படுத்தினாள்.

நாங்கள் பத்மஜாவின் வீட்டை அடைந்தவுடன், அவளுக்கு உடம் பொன்றுமில்லை என்பதைத் தெரிந்து கொண்டோம். "வா அம்மாஞ்சி!" என்று என்னை வரவேற்ற பத்மஜா வின் உருவத்தைக் கண்டு பிரமித்துப் போனேன்! ஐந்து வருஷங்களுக்கு முன், 'வாயில்' புடவையுடனும், நவ நாகரிகச் செயற்கை அலங்காரங்களுடனும் மகிழ்ச்சியே உருவாய்த் திகழ்ந்த அந்த உருவத்துக்கும், மஞ்சளும் குங்குமமுமே ஆபரணமாகவும், பொறுமையே அலங் காரமாகவும் தோன்றிய இந்த உருவத் துக்கும் எவ்வளவு வித்தியாசம்? அன்று பத்மஜா மகிழ மரத்தடியில் சொன்ன வார்த்தைகளின் உண்மையை, இன்று நேரில் கண்டேன். அவள் முகம் சந்தோ ஷத்தை யிழந்து வெகு நாட்கள் ஆகி யிருக்கும்.

பத்மஜா, அவள் கணவனை எனக்கு அறிமுகம் செய்து வைத்தாள். பத்மஜா வின் கணவன் மிக்க நல்ல மனிதன். அவன் என்னுடன் பேசிய கொஞ்ச நேரத்திற்குள் பல முறை இருமலால் கஷ்டப்பட்டான். அந்த க்ஷயரோகமே அவனுடலை உருக்கியது. "இதுவும் பத்மஜாவின் விதிபோலும்" என்று எண்ணினேன்.

பல வேலைக்காரர்க ளிருந்தும், வய தான மாமியார், மாமனார், வியாதிஸ்த னான கணவன் இவர்களுக்கு வேண்டிய சிச்ருஷைகள் யாவும் பம்பரம்போல் பத்மஜாவே செய்து கொண்டிருந்தாள். அப்போது அவள் என் கண்களுக்கு கிரக லக்ஷ்மியாகவே காட்சியளித்தாள். அவள் வேலைகளை யெல்லாம் முடித்துக்

கொண்டு, நாங்கள் இருக்கும் இடத்திற்கு வந்தாள். அம்மாவுடன் குசலப் பிரசனம் ஆனவுடன் என்னைப் பார்த்து, "என்ன அம்மாஞ்சி! பேசவே மாட்டேன் என்கிறாயே" என்றாள்.

"பத்மஜா! உன் கணவனைப் பார்த்த பின் என் மனம் ஒரு நிலையிலில்லை; இந்த வியாதி இருப்பது தெரிந்துதான், உன் அப்பா உன்னைப் பலியிட்டாரா?" என்று தாழ்ந்த குரலில் கேட்டேன்.

"விவாகத்திற்குப் பிறகுதான், அப்பாவுக்கு இது தெரியும். அது முதல் அவர் படும் துன்பம் அவர் உடம்பையே உருக்கி விட்டது. அவர் உனக்குச் செய்த துரோகத்தின் பலனே இது என்று சொல்லிச் சொல்லிப் புலம்புகிறார். அப்பா உனக்கு எழுதிய பல உருக்கமான கடிதங்களுக்கிரங்கியாவது நீ வருவாய் என்று ஒவ்வொரு நாளும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். அம்மாஞ்சி! சென்று போனதை நினைந்து வருந்துவதில் பயனில்லை. உன்னைப் பார்க்க ஏங்கிக் கொண்டிருக்கும் உன் அத்தை, அத்திம்பேரின் மனதைக் குளிரச் செய்" என்று உருக்கமாக வேண்டினாள்.

"பத்மஜா! நீ வேறு எது சொன்னாலும் நான் கேட்கத் தயார். ஆனால் என் வாழ்வைப பாழ்பண்ணிய அந்த மனிதரை மட்டும் பார்க்கச் சொல்லாதே!" என்றேன்.

"ஓ, நான் எது சொன்னாலும் கேட்பாயா? அபபடியானால், இந்தப் படத்தைப் பார்" என்ற வண்ணம் சுவரில் மாட்டியிருந்த போட்டோவைக் கழற்றி என்னிடம் கொடுத்தாள்.

போட்டோ, வேறு யாருடையதுமல்ல; கலியாணத்திற்கு முன் எடுக்கப்பட்ட பத்மஜாவின் போட்டோதான். அதை ஏன் அவள் என்னிடம் காட்ட வேண்டும்? விஷயம் விளங்காமலே பத்மஜாவின் முகத்தைப் பார்த்தேன்.

"என்ன அம்மாஞ்சி! போட்டோவிலிருப்பது யாரென்று தெரிகிறதா?" என்ற பத்மஜாவின் கேள்வி எனக்கு ஆச்சரியத்தை அளித்தது.

"இது என்ன விளையாட்டு, பத்மஜா! உன் உருவைக் கூட மறந்திருப்பேன் என்று நினைக்கிறாயா?" என்றேன்.

இதைப் பதிலைக் கேட்டு அவள் கண்களில் ஆச்சரியம் பிரதிபலித்தது.

"அம்மாஞ்சி! படுத்துக் கொள், மற்றதைக் காலையில் பேசிக் கொள்வோம். அவசியம் நீ மதுரைக்கு வரத்தான் வேண்டும். வந்து அப்பாவைப் பார்க்க வேண்டும்" என்று கண்டிப்பான குரலில் உத்தரவு போட்டுவிட்டு, பத்மஜா படுக்கப் போய்விட்டாள்.

4

● மறுநாள் பத்மஜாவின் வேண்டுகோளை மறுக்க முடியாமல் மதுரைக்குப் புறப்பட்டேன். கணவன் உத்தரவு பெற்று பத்மஜாவும் எங்களுடன் வந்தாள். நாங்கள் புறப்பட்டவுடன், "பத்மஜா! முகூர்த்தம் வைத்தவுடன் எனக்குத் தந்தி கொடு" என்று புன்சிரிப்புடன் கூறிக்கொண்டே, எங்களை வழி யனுப்பினான் பத்மஜாவின் கணவன்.

எங்கள் இன்பகரமான பால்ய விளையாட்டுக்களை நினைவூட்டிய அத்தையின் பங்களாவை யடைந்தோம். அத்தையும், அத்திம்பேரும் கோவிலுக்குச் சென்றிருந்தபடியால், "ஆ! சின்ன ஐயா! வாங்க சாமி! இப்பவாச்சும் வழி தெரிஞ்சுச்சே! நல்லா மலையிலே போய்க்குந்திக்கிட்டே!" என்ற குற்றச் சாட்டுடன் வரவேற்றாள் எங்கள் பழைய வேலைக்காரி.

ஒரு வாரமாய்ச் சேர்ந்தாற்போல் செய்த பிரயாண அலுப்பாலும், பழைய நினைவுகளாலும் எனக்குத் தலைசுற்றியது. நல்ல காற்றுக்காகத் தோட்டத்தை அடைந்தேன். அந்த மகிழ மரம் பின்னும் பல நினைவுகளை உண்டாக்கியது. எத்தனை இரவுகள் நானும், பத்மஜாவும் பால் போன்ற நிலவில் இந்த மரத்தடியில் 'பதினைந்தாம் புள்ளி' விளையாடி யிருக்கிறோம்? பல நினைவுகளையும் தாண்டி, நான் கடைசியாகச் சந்தித்த போது, பத்மஜா பதுமைபோல் நின்ற காட்சி என் மனத் திரையில் தோன்றியது. அன்று நான் கூறிய கடுஞ் சொற்களால் அவள் மெல்லிய இருதயம் எப்படித் துடித்ததோ? .... இந்த சமயத்தில்தான் என் நிஷ்டை கலைந்து "அப்பா உங்களைச் சாப்பிடக் கூப்பிடுகிறார்" என்ற குரலைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன். "பத்மஜா!" என்று கூப்பிட்டேன். "இல்லை, நான் வனஜா" என்று பதில் வந்தது. குரலின் மாறுதல் என்னை வியப்படையச் செய்தது. "ஆ! வனஜாவா? அடையாளமே தெரியவில்லையே" என்று சொல்லி விட்டு, "பார்த்து ரொம்ப நாளாயிற்று. சௌக்யந்தானே! உன் அகத்துக்காரர் சௌக்யமா?" என்றேன்.

"அதென்ன அப்படிக் கேட்கிறீர்கள்? நீங்கள் இல்லாமல் எனக்குக் கல்யாணம் ஆகி விடுமா? பழைய காலத்திலல்லவா மாப்பிள்ளை இல்லாமல் வில்லுக்கும் கத்திக்கும் மாலையிடுவார்கள்?" என்று சிரித்துக்கொண்டே சொன்னாள்.

அப்பொழுது பத்மஜா வந்தாள். "அம்மாஞ்சி! என் அப்பா உனக்கிழைத்த தீமைக்குப் பிராயச்சித்தம் செய்து கொள்ள விரும்புகிறேன். கலியாண வயதை யடைந்தும், வனஜாவுக்கு அவர் விவாகம் செய்ய முயற்சிக்காம லிருப்பதிலிருந்தே இதை நீ தெரிந்து கொள்ளலாம். அம்மாஞ்சி! நீ என்னிடம் வைத்துள்ள அன்பு உண்மையாயின், என் சொல்லைத் தட்டாதே. உன் பிரம்மசர்ய விரதத்தை யெல்லாம் எனக்காக விட்டு விடு. அன்று தஞ்சையில் வனஜாவின் போட்டோவைப் பார்த்து என்னுடைய தென்று யல்லவா? வனஜா உருவத்தில் மட்டும் என்னைப் போலிருப்பதாய் எண்ணாதே! நான் உன்னிடம் வைத்த தெய்விக அன்பு முழுதையும், அவள் இளம் உள்ளத்தில் புகுத்தி யிருக்கிறேன். அன்று இதே இடத்தில் உன் உள்ளத்தைப் பிளக்கும் வார்த்தைகளைச் சொன்னேன். இன்று என் அன்பின் பரிசாக இவளை ஏற்றுக்கொள்" என்றாள் கெஞ்சும் குரலில் பத்மஜா.

இரு சகோதரிகளையும் மாறி மாறி நோக்கினேன். அன்று நிலவில் பத்தினிக் கடவுள் போல் தோன்றிய பத்மஜா, வனஜாவைத் தன் அருகில் அழைத்து, அவள் கையைப் பிடித்துக்கொண்டு என் முகத்தை ஆவலுடன் நோக்கினாள். அவள் அன்பு மயமான சொற்களால் கட்டுண்டிருந்த நான், அவள் அளிக்கத் தயாராயிருக்கும் காதற் பரிசை மறுக்க இயலாமல் என் கைகளை நீட்டினேன்.

எங்கள் இருவர் கைகளையும் சேர்த்து ஆசி கூறிய பத்மஜாவின் முகத்தில் ஆனந்தம் பொங்கியது. அதே சமயம் மகிழ மரத்தின் புஷ்பங்கள் காற்றினால், பொல பொலவென்று எங்கள் மேல் உதிர்ந்தன.

• • •

மெல்லிய கரம் ஒன்று என் நெற்றியைப் பிடிக்கவே, சிந்தனை கலைந்து எழுந்தேன். "என்ன உங்க நெற்றி, பொட்டெல்லாம் கொதிக்கிறதே! தலையை வலிக்கிறதா?" என்று கவலையோடு கேட்ட வண்ணம், இடையில் பால கோபாலனைச் சுமந்து நின்றாள் வனஜா.

"அதெல்லாம் ஒன்றுமில்லை வனஜா! வெயில் ஜாஸ்தி. அதனால் மூளையே கொதிக்கிறது. உம், அடா மணி ஆறு ஆகி விட்டதே! டிரைவர் வந்து விட்டானா? காரைக் கொண்டு வரச் சொல். ஸ்டேஷனுக்குப் போக வேண்டும். இன்று பத்மஜா வரப்போவதை மறந்து விட்டாயா?" என்றேன் என் மனைவியை நோக்கி. வனஜாவும் சந்தோஷத்துடன் குதித்துக் கொண்டு ஓடினாள்.

• • •

★ கமலா சதா சர்வ காலம் புத்தகமும் கையுமாக இருப்பாள். எனக்குப் புத்தகம் என்று பேச்சு எடுத்தாலே தூக்கம் வரும். ஆனால் ....

கல்யாண மர்மம்

—ஆர்.எஸ்—

● நான் ஸீனியர் பி. ஏ.க்கு வந்ததும் எழும்பூரில் ஓர் தனி அறை எடுத்துக் கொண்டேன். என் அப்பாவிற்கு என்னை ஹாஸ்டலில் விட மனம் இல்லை. எனக்கென்று ஓர் அருமையான இடம் கிடைத்தது. என் வீட்டின் எதிர் வீட்டில்தான் கமலாவும் அவள் தகப்பனாரும் குடியிருந்தது. அவளைக் கண்டது முதலே எனக்கு அவள் மீது காதல் ஏற்பட்டிருந்தது. என் அறையிலிருந்து பார்த்தால் கமலாவின் அறை நன்றாகத் தெரியும். கமலா சதா சர்வ காலம் புத்தகமும் கையுமாக இருப்பாள். எனக்குப் புத்தகம் என்று பேச்சு எடுத்தாலே தூக்கம் வரும். ஆனால் கமலாவுக்காகப் புத்தகத்தைக் கையில் வைத்துக் கொண்டு தூங்காமல் இருந்தேன்.

கமலா காலேஜிலிருந்து வந்ததும் வராததுமாகப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு படிக்க உட்கார்ந்து விடுவாள். உடனே நானும் கையில் ஓர் புத்தகத்தை ஏந்திக்கொண்டு ஜன்னல் அருகில் உட்கார்ந்துவிடுவேன். படிப்பது போல் இருப்பேனே ஒழிய என் கவனமெல்லாம் அவள் பேரில்தான்.

கமலாவுக்காக விளையாடும் பழக்கத்தை விட்டேன். சாயங்காலம் வம்பு அடிப்பதை அடியோடு நிறுத்தினேன். கையில் பெரிய புத்தகமாக எடுத்துக் கொண்டு ஜன்னலே கதி என்று இருக்கலானேன். அவள் இரவு பதினொரு மணி வரையில் படித்தால் நான் பன்னிரண்டு மணி வரையில் படிப்பேன்.

இம்மாதிரியே நாட்கள் சென்றன. பரீட்சையும் வந்தது. என் புத்தியில் ஒரு வார்த்தையாவது ஏறியிருந்தால் தானே! .... ஆகையால் பரீட்சையில் கெம்பரீட்டு வெறுந் தாளைக் கொடுத்தேன். கமலாவைப் பிரிய மனமில்லாமல் பட்டணத்தை விட்டு ஊர்ப்போய்ச் சேர்ந்தேன். அந்தப் பெண்ணை எனக்குக் கல்யாணத்துக்குப் பேசும்படி தந்தையிடம் சொன்னேன். ஆனால் அவர் அதைப்பற்றி அக்கரை எடுத்துக் கொள்ளவில்லை.

● ஒரு நாள் நான் சமையலறையில் மிளகாய்ப் பச்சடியை ருசி பார்த்துக் கொண்டிருந்தபோது, என் தகப்பனாரும் இன்னும் யாரோ ஒருவரும் கூடத்தில் பேசுவது காதில் விழுந்தது. பரிச்சயமான குரலாக இருக்கிறதே என்று ஒட்டுக் கேட்டேன்.

"பிள்ளையாண்டான் இருக்கானே இல்லையோ, நல்ல மாதிரி, புத்திசாலி; தானுண்டு புத்தகமுண்டு, பிறர் ஜோலிக்குப் போக மாட்டான். இந்தக் காலத்திலே இப்பேர்ப்பட்ட பையன் ஒருவன் இருந்தான் என்றால் எங்காத்திற்கு எதிராத்திலேதானே இருந்தான் ... பிள்ளையாண்டானைப் பார்த்த நாளே என் கமலாவுக்கு இவன்தான் என்று முடிபோட்டு விட்டேன். கமலாவுக்குப் படிப்பு என்றால் உயிர். இந்த இன்டர் பரீட்சைக்குப் படிப்பு படித்திருக்காள் பாருங்கோ, ... ஆஹா! எல்லாத்துக்கும் அவன்தான் காரணம். உங்கள் பிள்ளை படிக்கறதைப் பார்த்து விட்டு, அவள் ரொம்பப் படிக்க ஆரம்பித்து விட்டாள்! இந்தத் தடவை மெடல், பிரைஸ் எல்லாம் கூடக் கிடைக்குமோ என்னமோ!"

இம்மாதிரி கமலாவின் தகப்பனார் சொல்லிக் கொண்டிருந்தார். அப்புறம் எனக்கும் கமலாவுக்கும் கல்யாணம் நடந்தது. கல்யாணம் ஆன தினமே என் மனைவியை அவள் பரீட்சைக்கு இராப் பகலாய்ப் படித்ததைப் பற்றிப் பரிகசித்தேன். அவள் என்ன சொன்னாள் தெரியுமா?

"நான் பரீட்சைக்கும் படிக்கல்லே, இரீட்சைக்கும் படிக்கல்லே. உங்களைப் பார்த்ததிலிருந்து என் மனம் உங்கள் பால் லயித்துப் போய் விட்டது. அதனால் எப்போதும் பெரிய பெரிய புத்தகமாகக் கையில் ஏந்தி ஜன்னலருகில் உட்கார்ந்து கொண்டு படிக்கிற மாதிரி பாவனை செய்தேன் ... கடைசியில் இந்தப் பரீட்சையில் வெறும் தாள் கொடுத்து விட்டு வந்து விட்டேன் .... ஹி ... ஹி ... ஹி ..." என்று சிரித்தாள்.

நானும் கூடச் சிரித்தேன் என்று சொல்லவும் வேண்டுமா?

★ பட்டு கோபத்துடன், "அடே, பேசாமே இருடா, மணி! அவள் தலை பின்னிக்கக் கூடாது. அவளுக்கு ஆத்துக்காரர் இல்லை" என்றான் மெதுவாக.

தொடர்கதை

உறங்கு [illegible]

து. ரா.

பன்னிரண்டாம் அத்தியாயம்

மதுரம் சர்க்கஸ் போகிறான்

சாந்தி நகர் நவாப் மைதானத்தின் தோற்றமே அன்று இரவு மாறிப் போய்விட்டது. சர்க்கஸ் டேராவைச் சுற்றி எங்கே பார்த்தாலும் பல வர்ணங்களில் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. தூரத்திலிருந்து பார்க்கும் பொழுது, அந்தக் கரிய இருளின் நடுவில் காணப்பட்ட அந்த சர்க்கஸ் கொட்டகை, கனவு லோகத்தில் நிர்மாணிக்கப் பட்ட ஒரு பட்டணம் போலத் தோற்றமளித்தது.

அன்று இரவு தங்கமணி வீட்டில் எல்லோரும் சர்க்கஸுக்குப் போகக் கிளம்பினார்கள். நாராயணய்யருக்கு வேறு வேலை யிருந்தபடியால் பட்டுவையும் மணியையும் ஸர்க்கஸுக்கு அழைத்துக் கொண்டு போகும்படி தங்கமணியிடம் சொல்லியிருந்தார். ஆகவே, அந்தக் குழந்தைகள் இருவரும் சித்தப்பா வீட்டுக்கு சாயங்காலமே வந்திருந்தனர். சர்க்கஸுக்குப் போவதற்காக வீட்டெதிரில் கார் வந்து நின்றதும் மணிக்கும் பட்டுவுக்கும் சந்தோஷம் தாங்கவில்லை. எல்லோருக்கும் முன் காரில் போய் உட்கார்ந்து கொண்டு அமர்க்களம் பண்ணினார்கள். மணி "பாம், பாம்" என்று ஹாரனை அமுக்கினான். பட்டு, "வா சித்தி, வா சித்தி" என்று அவசரப் படுத்தினாள். உள்ளே புடவை உடுத்திக் கொண்டிருந்த சுசிலா மதுரத்தைப் பார்த்து, "நீ போய்க் குழந்தைகளுடன் காரில் உட்கார்ந்து கொள். நான் இதோ ஒரு நிமிஷத்தில் வந்து விடுகிறேன்," என்றாள். அதைக் கேட்டு மதுரம் தாழ்ந்த குரலில், "வேண்டாம் அக்கா, நான் வரவில்லை" என்று தலையைக் குனிந்து கொண்டு கூறினான்.

"வரவில்லையாவது! நன்றாயிருக்கிறது. அப்பாவைக் கூடக் காணோம். உன்னைத் தனியாய் இந்த வீட்டில் விட்டு விட்டுப் போகச் சொல்கிறாயா என்ன?"

மதுரம் வேறு வழி யில்லாமல் சென்று குழந்தைகளுடன் காரில் உட்கார்ந்தான். பட்டுவுக்கும மணிக்கும் அவனிடம் ரொம்பப் பிரியம். மணி, "என்ன, சர்க்கஸ் பார்க்க வரமாட்டேன் என்றாயாமே? சர்க்கஸ் என்றால் உனக்குப் பயமாமே! ஐய! இவ்வளவுதானா நீ?" என்று பரிகாசம் பண்ணினான். பிறகு அவனையே பார்த்துக் கொண்டிருந்த அவன் "நீ ஏன் தலையை எப்பொழுதும் பின்னிக் கொள்கிறதே இல்லை?" என்று கேட்டான்.

பட்டு கோபத்துடன், "அடே, பேசாமே இருடா மணி! அவன் தலை பின்னிக்கக் கூடாது. அவனுக்கு ஆத்துக் காரர் இல்லை" என்றான் மெதுவாக.

"அப்படியானால் எப்பொழுதுமே தலை பின்னிக்கக் கூடாதா, என்ன?"

"ஆமாம்"

"நான்சென்ஸ்!" என்று கம்பீரமாய் அதட்டினான் மணி. "போமடை பைத்தியம்! 'நவயுகம்' என்கிற படத்திலே நாம் பார்த்தோமே. ஆம்படையான் செத்துப்போன அப்புறம் ஒரு பெண் இன்னொருத்தனைக் கல்யாணம் பண்ணிக்கிறாள். அவன் அவளை நிற்க வைத்து நெற்றியிலே குங்குமங்கூட இட்டு விடுகிறானே. அப்புறம் அவள் தலை பின்னிக்கொண்டு, பூ வைத்துக் கொண்டு வருகிறாளே ஜம் என்று."

அந்த சமயத்தில் தங்கமணி வெளியே வந்து "எங்கே சுசிலா?" என்று கேட்டான்.

"உள்ளே இருக்கிறான், சித்தப்பா" என்று பட்டு தெரிவித்தாள்.

சுசிலா அப்பொழுதுதான் நெற்றிக்கு இட்டுக் கொண்டிருந்தாள். "ஏது, நீ ட்ரெஸ் பண்ணி முடிகிறதுக்குள்ளே ஸர்க்கஸ் கம்பெனி வேறே ஊருக்குப் போய் விடும்போலே இருக்கிறதே" என்று தங்கமணி சொன்னதும் திரும்பி "இதோ வந்து விட்டேன்" என்றாள்.

"ஏன் சுசிலா! சர்க்கஸுக்கு நானும் வரவேண்டுமா என்ன? உங்களுக்கு டிக்கெட் வாங்கிக் கொடுத்து உங்களை உள்ளே அனுப்பி விட்டு ஆத்துக்கு வந்து விடுகிறேன். அப்புறம் சர்க்கஸ் முடிகிறபோது வந்து அழைத்துக் கொண்டு வந்து விடுகிறேனே" என்று தங்கமணி சொன்னான்.

சுசிலா இதைக் கேட்டு ஆச்சரியப்பட்டு "ஆத்திலே என்ன பண்ணப் போகிறீர்களாம்? நீங்கள் சர்க்கஸ் பார்க்க வேண்டாமா?" என்றாள்.

"ஆமாம், என்ன சர்க்கஸ் இது? என்னமோ குழந்தைகள் பார்க்க வேண்டும் என்று ஆசைப்படுகிறதுகள்."

"சரிதான். குழந்தைகளுக்கு சர்க்கஸ் காண்பிக்க வேண்டும் என்றால் அதற்கு நான்தான் அகப்பட்டேன் போலே இருக்கிறது? இந்த நொண்டிச் சாக்கெல்லாம் ஏன் சொல்கிறீர்கள்? என்னுடன் கூட வருவது உங்களுக்குப் பிடிக்கவில்லையாக்கும். அப்படிச் சொல்லிவிட்டுப் போகிறதுதானே?"

"ஐயோ, இதென்ன இவ்வளவு கோபம்! சரி, நானும்தான் வருகிறேன் வா" என்றான் தங்கமணி.

"வேண்டாம், வேண்டாம். நான் வரவில்லை. உங்களுடன் நான் வருவதை நாலு பேர் பார்த்தால் உங்களுக்கு அவமானமாகத்தான் இருக்கும். நீங்கள் போங்கள் குழந்தைகளை அழைத்துக் கொண்டு" என்றாள் சுசிலா.

அவள் கோபமான முகத்தைப் பார்த்துத் தங்கமணி புன்சிரிப்புச் சிரித்தான். "நன்றாயிருக்கிறது கோபம்! உன்னுடன் வர எனக்குப் பிடிக்கவில்லை என்று நான் சொன்னேனா? எவ்வளவோ சர்க்கஸ் பார்த்தாய் விட்டது; அதற்காகச் சொன்னேன். வரத்தான் வேண்டுமென்றால் வருகிறேன். அதற்கு ஏன் இப்படி கோபித்துக் கொள்கிறாய்?" என்று கேட்டான்.

"கோபம் ஒன்றுமில்லை, போங்கள். நன்றாக இல்லாத சர்க்கஸுக்கு நான் ஏன் வரவேண்டும்? குழந்தைகளுக்குக் காண்பிக்க வேண்டுமென்றால் நீங்கள்தான் போய்க் காண்பித்து விட்டு வாங்களேன். அதற்கு நான்தானா அகப்பட்டேன்?" என்று சொல்லிச் சுசிலா உட்கார்ந்து கொண்டாள்.

அப்பொழுது காரிலிருந்து மணி, "சித்தி! சித்தப்பா! நாழியாகிறதே" என்று கூப்பிட்டான்.



தங்கமணி, "எழுந்திரு சுசிலா, நாழியாகிறது" என்றான்.


"ஊஹூம்—நான் வரவில்லை. நீங்கள் போங்கள்."

"என்ன பிடிவாதம் இது? வர வர உனக்கு மூளைதான் கெட்டுப் போய்க் கொண்டிருக்கிறது."

"ஆமாம். எனக்கு மூளைதான் கெட்டுப் போய்விட்டது. புத்திசாலியாயிருக்கிறவாளோடேயே நீங்கள் போய் விட்டு வாருங்கள். அவளுடன் போனால் ஒருத்தரும் உங்களை ஒன்றும் சொல்ல மாட்டார்கள்" என்றாள்.

தங்கமணிக்குக் கோபம் வந்தது. "நான் யாருடன் போனால் யாருக்கென்ன? யார் என்னை என்ன சொல்கிறது? நீ வரப்போகிறாயா, இல்லையா?" என்று இரைந்தான்.

சுசிலா பேசாமல் இருக்கவே அவனுக்கு இன்னும் கோபம் அதிகமாய் விட்டதால் வேகமாக அங்கிருந்து வெளியே சென்று காரில் ஏறி உட்கார்ந்



"ராமசுப்பன்! சமாசாரத்தைக் கேட்டாயா?..."

தான். கார் புறப்படும்போது மணியும் பட்டுவும் சேர்ந்து, "சித்தி எங்கே?" என்று கேட்டார்கள்.

"அவள் வரவில்லையாம். நாம் போவோம்" என்றான் தங்கமணி.

"அப்படியானால் நானும் இறங்கிப் போகிறேன்" என்று கிளம்பினாள் மதுரம். ஆனால் அதற்குள் கார் கிளம்பி விட்டது. அந்தச் சப்தத்தில் மதுரம் சொல்லியது தங்கமணி காதில் விழவில்லை.

பதின்மூன்றாம் அத்தியாயம்

ஆபீஸ் வம்பு

சாந்திநகரில் இருந்த காகித உற்பத்திக் கம்பெனியின் கட்டிடம், அகௌண்டண்ட் அனந்தாச்சாரியினாலேயே களை பொருந்தி விளங்கிற்று.

கம்பெனி ஆபீஸுக்குப் பியூன்கள் இருந்தபோதிலும், ஆபீஸுக்கு முதலில் வந்து கதவைத் திறப்பதென்னமோ அகௌண்டண்ட் அனந்தாச்சாரி தான். அனந்தாச்சாரிக்கு வீட்டில் குழந்தைகள் உபத்திரவம் அதிகமாதலால் பியூனிடமிருந்து சாவியை வாங்கி வைத்துக்கொண்டு எட்டு மணி வரையில் ஆபீஸிலேயே கழித்துவிட்டுப் போகும்போது கதவைப் பூட்டிக் கொண்டு போவார். இதனால் காலையிலும் அவரே முதலில் ஆபீஸுக்கு வந்து கதவைத் திறக்க வேண்டியதாய் இருக்கும்.

அன்று ஒன்பது மணிக்கு வழக்கப்படி அனந்தாச்சாரி கதவைத் திறந்துகொண்டு ஆபீஸுக்குள் சென்றார். ஜன்னல்களைத் திறந்து விட்டு, தம் மேஜை எதிரில் வந்து நாற்காலியின்மேலிருந்த தூசியைக் குடையினால் துடைத்து விட்டு "அப்பா—டா" என்று சாய்ந்தார்.

சற்று நேரத்திற்கெல்லாம் ஹெட்கிளார்க் தேவராஜ முதலியாரும், டைபிஸ்ட் ராமசுப்பனும் வந்தார்கள்.

"என்ன அனந்தாச்சாரியார்! லீவ் போடப் போகிறேன் என்றீரே, போட்டாச்சா?" என்று ஹெட்கிளார்க் கேட்டார்.

"இல்லை, ஸ்வாமி, போடணும்" என்றார் அகௌண்டண்ட்.

"எதற்கு ஸார் லீவு? கல்யாணம் பண்ணுகிறீரா என்ன பெண்ணுக்கு?" என்று ராமசுப்பன் கேட்டான்.

"இல்லை, ராமேச்வரம் போகலாம் என்று பார்க்கிறேன்."

"பாவம், குழந்தை இல்லையே என்று ராமேச்வரம் போகப் போகிறார் போலிருக்கிறது" என்றார் ஹெட்கிளார்க், ராமசுப்பன் சிரித்தான். அனந்தாச்சாரியும் சிரித்துக்கொண்டே, "வாஸ்தவந்தானே, ஐயா! இப்பொழுது பதினொன்று இருக்கிறது. இன்னும் ஒன்று பிறந்து விட்டால் கணக்குச் சரியாய் விடுமோன்னோ?" என்றார்.

பிறகு, வாசல் கதவுப் பக்கம் ஒரு தரம் பார்த்து விட்டு அவர், "ராமசுப்பன்! சமாசாரத்தைக் கேட்டாயா? தங்கமணி புதுசா ஒரு பெண்ணைப் பிடித்துக்கொண்டு வந்திருக்கிறானாமே நிஜந்தானா?" என்று கேட்டார்.

ஹெட்கிளார்க், மண் கூஜாவிலிருந்து கிளாஸ் டம்ளரில் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தவர், சட்டென்று நிமிர்ந்து "அதென்னய்யா அது?" என்றார்.

"ராமசுப்பனைக் கேளும், எல்லாம் சொல்லுவான்."

"எனக்கென்ன ஸார் தெரியும்? நீங்கள்தான் என்னமோ சொல்லுகிறீர்கள்" என்றான் அவன்.

"சும்மா சொல்லப்பா. அதுதான் ஊர் முழுக்கத் தெரிந்திருக்கிறதே!"

"அதெல்லாம் ஒன்றும் இல்லை ஸார். அவர் வெறுமனே சொல்லுகிறார், நீங்களும் நம்புகிறீர்களே. தங்கமணி வீட்டுக்குப் புதுசா ஒரு சமையல்காரி வந்திருக்கிறாள். அவ்வளவுதான் விஷயம்" என்றான் ராமசுப்பன்.

"நீ பார்த்தாயா அவளை?" என்றார் அனந்தாச்சாரி.

"இல்லை."

"அப்போ உனக்கென்ன தெரியும்? நான் பார்த்தேன், முதலியார்வாள்."

"சமையல்காரியாவது மண்ணாவது? கண்ணிருக்கிறவன் எவனும் நம்பமாட்டான். வெளிக்கு வேணுமானால் சொல்லிக் கொள்ளலாம்."

"ஏன்? அதென்ன அப்படி?"

"கேளுமே. சமையல்காரிக்கு வயது பதினெட்டு. ஆனால் விதவை. ஆள் எப்படி இருக்கிறாள் தெரியுமோ? படத்திலே எழுதிப் பார்த்தால் எப்படி இருக்குமோ அப்படி இருக்கிறாள். போதுமா?"

"நம்ப வீட்டுக்காரி அன்றைக்குப் போயிருந்தாளாம் அவாள் வீட்டுக்கு. அந்தப் பெண்ணை அவன் சமையல்காரி என்றே சொல்லவில்லையாம். 'என் தங்கை; ஊரிலிருந்து வந்திருக்கிறாள்' என்றே சொல்லிக் கொண்டாளாம். படிக்காதவனாய் இருந்தால், பூனை எலியை மோப்பம் பிடிப்பதுபோல் தனக்குப் போட்டியாய் வருகிறவனை மோப்பத்தினாலேயே கண்டு கொள்வான். படித்தவுகள் லக்ஷணம் இவ்வளவுதான்! கண்ணெதிரில் இருப்பதே அதுகளுக்குத் தெரிகிறதில்லை. உணர்ச்சி எல்லாம் மழுங்கிப் போய்விடுகிறது —"

பேச்சு ஸ்வாரஸ்யத்தில் வெளியே கார் வந்து நின்ற சத்தம் அனந்தாச்சாரியின் காதில் விழவில்லை. உள்ளே நுழைந்த தங்கமணி, "ஏன், அனந்தாச்சாரியார்! யாருக்கு உணர்ச்சி மழுங்கிப் போய்விட்டது?" என்று கேட்டுக் கொண்டே வந்தான். அவன் அந்த ஆபீஸ் சொந்தக்காரன்.

அனந்தாச்சாரியார் விளையாட்டாகப் பேசும் தோரணையிலேயே, "இல்லை; உங்கள் வீட்டுச் சமையல்காரியைப் பற்றிப் பேச்சு வந்தது. ராமசுப்பன் சிறு பிள்ளைதானே? 'அந்த மாதிரி சமையல்காரி அகப்பட்டால் தேவலை எனக்குக் கூட' என்றான். அதற்குத்தான் கேலி பண்ணுகிறார் முதலியார்" என்று பழியை ராமசுப்பன் தலையில் போட்டார். டைப் ரைட்டர் எதிரில் உட்கார்ந்திருந்த ராமசுப்பன் திடுக்கிட்டு, "ஐயையோ, நானா சொன்னேன் அந்த மாதிரி! என்ன ஸார் இது?" என்றான்.

விளையாட்டாகப் பேசினால் வழக்கம் போல் தானும் சேர்ந்து கொண்டு தங்கமணி சிரிப்பான் என்று அனந்தாச்சாரியார் எதிர் பார்த்ததற்கு மாறாக அன்று தங்கமணி முகம் சிவந்தது, கைக் கடியாரத்தைப் பார்த்துவிட்டு, "சரிதான், மணி பதினொன்று ஆகிறது. வேலை நடக்கட்டும். வம்பெல்லாம் வீட்டிலே வைத்துக் கொள்ளலாம்" என்று கடு கடுப்புடன் கூறிவிட்டுத் தன் அறைக்குள் சென்றான்.

அகௌண்டட், ஹெட்கிளார்க் பக்கம் திரும்பி, தம் புருவங்களை ஒருதரம் உயர்த்தி விட்டுத் தாழ்த்தினார். "பார்த்தீரா?" என்ற அர்த்தம் அதில் தொனித்தது. (தொடரும்)



நாயும் வெண்தயிர் மத்தொலி துள்ளவும்
ஈட வெள்வளை வாய்விட் டரற்றவும்
நயும் நுண்ணிடை சென்று வணங்கவும்
நுயர் மங்கையர் அங்கை வருந்துவார்



விச் சித்திரம்—17 கம்பர்.



முதல் மார்க்கு

[ராஜி]

சேதுவும் பேபியும் வீட்டில் எப்பொழுதும் விளையாடிக் கொண்டும் விஷமங்கள் செய்து கொண்டும் இருந்தார்கள். அவர்களின் தாயார் "குழந்தைகளே! படியுங்கள், படியுங்கள்" என்று சொல்லிப் பார்த்தாள். தங்கள் தாயார் சொல்லிய சில நிமிஷங்கள் வரை சேதுவும் பேபியும் புஸ்தகத்தை வைத்துக் கொண்டு படிப்பதுபோல் பாசாங்கு செய்வார்கள். பிறகு விளையாடச் சென்று விடுவார்கள்.

அவர்கள் தகப்பனார் ஒரு மிருகக் காட்சிசாலையில் அதிகாரி. அவர்கள் காட்சிச்சாலையிலிருந்த ஒரு நெருப்புக் கோழியுடன் தினமும் விளையாடப் போவார்கள். நெருப்புக் கோழி மிகவும் நல்ல நெருப்புக் கோழியானதால் சேதுவையும் பேபியையும் பார்த்து, "குழந்தைகளே! படியுங்கள்" என்று சொல்லும். ஆனால் சேதுவும் பேபியும் அது சொல்லுவதையும் கேட்பதில்லை.

ஒருநாள் பள்ளிக்கூடத்தில் பரீக்ஷை. அன்று சேதுவுக்கும் பேபிக்கும் பள்ளிக்கூடத்திற்குப் போகப் பிடிக்கவே இல்லை. நன்றாகப் படித்திருந்தால்தானே பரீக்ஷையில் எழுதலாம்? பரீக்ஷைக்குப் போய்க் குறைந்த மார்க்கு வாங்க சேதுவும் பேபியும் இஷ்டப்படவில்லை.

சேது ஓடி வந்து "அம்மா எனக்கு மிகவும் தலை வலிக்கின்றது" என்று சொல்ல, அவன் தாயார், "சேது! நீ பள்ளிக்கூடம் போக வேண்டாம். படுத்துக் கொள்" என்று படுக்கையைப் போட்டாள். சேது படுக்கையில் படுத்துக் கொண்டான். "அப்பா! எனக்கு வயிற்று வலி மிகவும் ஜாஸ்தியாக இருக்கிறது" என்றாள் பேபி. "நீயும் இன்று பள்ளிக்கூடம் போக வேண்டாம். சேதுவின் பக்கத்தில் படுத்துக் கொள்" என்று உத்தர விட்டார் அவர்களின் தகப்பனார்.



தங்கள் சூழ்ச்சி பலித்தது என்று சேதுவும் பேபியும் சந்தோஷம் அடைந்தார்க... அன்று பள்ளிக்கூடத்தில் பரீக்ஷை என்பது குழந்தைகளின் தகப்பனாருக்கும் தாயாருக்கும் தெரியாது



ஆனால் நெருப்புக் கோழிக்கு மாத்திரம் தெரியும். அதற்குத் தெரிந்து என்ன பிரயோஜனம்?

தாயார் தகப்பனருக்கு எதிரில் சிறிது நேரம் படுத்துக் கொள்ளுவது போல் இருந்துவிட்டு சேதுவும் பேபியும் மறுபடியும் தோட்டத்திற்கு விளையாடப் போய்விட்டார்கள். அப்பொழுது பேபிக்கு ஒரு யோசனை தோன்றிற்று.

"நெருப்புக் கோழியை அழைத்துக் கொண்டு ஊரைச் சுற்றி வருவோமா?" என்று பேபி கேட்டாள். நெருப்புக் கோழியைப் பார்த்து "நீ எங்களுடன் வருகிறாயா?" என்று கேட்டான் சேது.

நெருப்புக் கோழி சிறிது யோசனை செய்து விட்டுத் தலையை அசைத்து "ஓ! வருகிறேன். ஆனால் உனக்கு வயிற்று வலி. சேதுவுக்குத் தலை வலி. நடக்கச் சிரமப்படுவீர்கள். என் மேல் ஏறிக் கொள்ளுங்கள்" என்றது.

குழந்தைகள் இதைக் கேட்டுச் சந்தோஷப்பட்டன. பிறகு இருவரும் நெருப்புக் கோழி மீது ஏறிக் கொண்டார்கள். நெருப்புக் கோழியும் வேகமாகச் செல்ல ஆரம்பித்தது.

பள்ளிக்கூடம் போய்ப் பரீக்ஷை எழுதுவதைவிட சவாரி செய்வது மிகவும் நன்றாக இருக்கிறது என்று குழந்தைகள் பெருமை கொண்டன. அப்போது நெருப்புக் கோழி ஒரு புது வழியாகப் போயிற்று. "இந்த வழி வேண்டாம், வேறு வழியாகப் போ!" என்று சேதுவும் பேபியும் கத்தினார்கள். ஏன் என்றால் அது பள்ளிக்கூடம் போகும் வழி! ஆனால் அவர்கள் சொல்லுவதை நெருப்புக் கோழி காதில் போட்டுக் கொள்ளவில்லை.

பள்ளிக்கூடம் நெருங்க நெருங்க நெருப்புக் கோழியின் மீது சவாரி செய்யும் குழந்தைகளின் முகமும் மாறுதல் அடைந்தது. அச்சமயத்தில் உபாத்தியாயர் வெளியே வந்தார். நெருப்புக் கோழி, உபாத்தியாயர் எதிரில் திடீரென்று நின்று, சேதுவையும் பேபியையும் கீழே இறக்கிற்று. "சரியான சமயத்தில் வந்தீர்கள். வாருங்கள்! பரீட்சைக்கு உட்காருங்கள்" என்று உபாத்தியாயர் சொல்ல சேதுவும் பேபியும் தலையைத் தொங்கவிட்டுக் கொண்டே பள்ளிக்கூடத்திற்குள் சென்றனர்.

அன்று இயற்கைப் பாட பரீட்சை. வாத்தியாயர் "உங்களுக்குத் தெரிந்த ஒரு பட்சியைப் பற்றியோ, மிருகத்தைப் பற்றியோ வேடிக்கையாக எழுதுங்கள்" என்று கேள்வி கேட்டிருந்தார். சேதுவும் பேபியும் தங்கள் நெருப்புக் கோழியைப் பற்றியே ஜோராக எழுதி விட்டார்கள். அவர்களுக்கு முதல் மார்க்குக் கிடைத்ததில் ஆச்சரியம் என்ன?





காலக்ஷேபம்

சாமர்த்தியம்

ஒரு மளிகைக் கடையில் சாமான் வாங்க வந்த ஒருவர் கடை முதலாளியைப் போல் அதட்டிப் பேசினார். கடை குமாஸ்தாவுக்கு இது கோபத்தை உண்டாக்கியது. அந்த சமயம் ஒரு பிச்சைக்காரன் வந்து பிச்சை கேட்டான்.

குமாஸ்தா (சாமான் வாங்க வந்தவரைக் காட்டி) :—இதோ இருக்கிறாரே இவர்தான் முதலாளி. இவரைக் கேள்!

சாமான் வாங்க வந்தவர் (சளைக்காமல்) :—குமாஸ்தா! உடனே இவனுக்கு எட்டணா கொடுத்து அனுப்பு.

—**எம். பழனி.**

யோக்கியதை

பிரபு (காணாமற் போன பிரம்பைக் கொண்டு வந்தவனைப் பார்த்து) :—உன்னுடைய குணத்தைக் கண்டு மெச்சுகிறேன். காணாமற்போன இந்தப் பிரம்பை நீயே எடுத்துக் கொள். கழிக்கு வெள்ளிப் பிடி போட்டிருப்பதால் நல்ல விலைக்குப் போகும்.

யோக்கியன் :—எனக்கு அந்தப் பிரம்பு வேண்டாம். மார்வாடிகள் அதை ஜெர்மன் ஸில்வர் என்று சொல்லி விட்டார்கள்.

—**ஏ. ஸ்ரீநிவாசன்.**

சமர்த்து

உபாத்தியாயர் :—டேய் பசங்களா! அந்தப் பெண் பள்ளிக்கூடத்திற்கு இன்ஸ்பெக்டர் வந்தபோது முற்று, அரை, கால் இப் புள்ளிகளைப் பற்றிக் கேட்டாராம்......நீங்களும் ஜாக்கிரதையாக இருங்கோ.

ராமு (எழுந்திருந்து) :—எல்லாம் எங்களுக்குத் தெரியும் சார்.

உபாத்தியாயர் :—தெரியுமா! சரி. அரைப்புள்ளி எப்படி எழுதுவாய், சொல்லு பார்ப்போம்.

ராமு :—முழுப் புள்ளி வைத்து அதில் பாதியை அடித்து விடுவேன் சார்.

—**சிவராமன்.**

எஜமான் கொடுத்தது

எஜமான் :—நான் ஒன்று சொன்னால் நீ ஒன்று செய்கின்றாயே. உனக்கு எந்த மடையன்டா வேலை கொடுத்தது?

வேலைக்காரன் :—நீங்கதானே எஜமான் கொடுத்தீங்க.

—**கே. சந்தானகிருஷ்ணன்.**

வேண்டாம்!

வியாபாரி :—இந்தப் புடவையை ஆயிரக் கணக்கான பேர்கள் உபயோகித்து வருகிறார்கள்!

வாங்க வந்தவர் :—அப்படியானால் அது எனக்கு வேண்டாம்! வேறே புதிசு இருந்தால் கொடும்! —**அமிர்தலிங்கம்.**

தூங்கிவிட்டார்

தாயார் :—சங்கரா, அப்பாவை எழுப்பு.

பையன் :—எதற்காக அம்மா?

தாயார் :—தூக்க மருந்து சாப்பிடாமல் தூங்கிப் போய்விட்டார்.

—**ஆர். அபிராமபாரதி.**

பரவாயில்லை

சினிமா டைரக்டர் :—இந்தக் காட்சியில் நீங்கள் ஒரு சிங்கத்துடன் நடிக்க வேண்டும்.

நடிகர் :—ஐயோ! சிங்கம் என்னைக் கொன்றுவிட்டால்?



டைரக்டர் :—பரவாயில்லை. இதுதானே கடைசிக் காட்சி! —**ஜி. கே. மூர்த்தி.**



உங்கள் சம்பளம் என்னவோ!

"நாடோடி"

● அது என்னமோ தெரியவில்லை, உலகம் முழுவதும் என் சம்பனம் என்னவென்று தெரிந்து கொள்வதில் பெரும் ஆவலாக இருப்பதாகத் தெரிகிறது. "என் சம்பனம் என்னவாயிருந்தால் இவர்களுக் கென்ன? என் குடித்தன நிர்வாகத்தை இவர்களா ஏற்று நடத்தப் போகிறார்கள்?" என்று "இவர்கள்" காதில் விழும்படி நானும் எத்தனையோ தடவைகள் சொல்லியாகி விட்டது. இருந்தாலும் "இவர்கள்" என்னை விடுவதாயில்லை.

முன் காலமாய் இருந்தால், "ஏன் ஸார், உங்களைத் தானே! எங்கே வேலையாய் இருக்கிறீர்கள்? உங்கள் சம்பனம் என்ன? மேல் வரும்படிக்கு ஏதாவது வழி உண்டா?" என்று 'டப், டப்' பென்று வெளிப்படையாகக் கேட்டு விடுவார்கள். நாமும் ஆளுக்கேற்றுப் போல் 'டப், டப்'பென்று பதில் அளித்து விடுவோம்.

● ஆனால் இப்பொழுதெல்லாம் நாகரிகம் அதிகமாகிக்கொண்டு வருகிறதல்லவா? அதனால் ஒருவரையொருவர் சம்பனம் என்னவென்று விசாரித்துத் தெரிந்து கொள்வது அநாகரிகம் என்று கருதப்படுகிறது. ஆனால், நேரிடையாகக் கேட்பது மட்டும் அநாகரிகம் என்று கருதப்படுகிறதே யொழிய, மறைமுகமான வழிகளில் சம்பளத்தைத் தெரிந்து கொள்ள முயல்வது நின்றபாடில்லை.

சமீபத்தில் என் நண்பர்கள், நண்பர்கள் அல்லாதவர்கள் எல்லாருக்கும் நான் என்ன சம்பளம் வாங்குகிறேன் என்று தெரிந்து கொள்ள ஆவல் அதிகமாகி விட்டது. முன்னைவிட அதிகமா, குறைச்சலா? இதை எப்படித் தெரிந்து கொள்வது? வாய்விட்டு, "உங்கள் சம்பனம் என்ன?" என்று கேட்பதோ அநாகரிகம். என்ன செய்வது?

எனவே, ஒவ்வொருவரும் ஒவ்வொரு வழியில் என் சம்பனம் என்னவென்று அறியப் பகீரதப் பிரயத்தனம் செய்து தான் வருகிறார்கள்.

● சிலர் இருக்கிறார்கள். அவர்கள் நேரே நம்மை வந்து கேட்க மாட்டார்கள். ஆனால் அடுத்த வீட்டு அண்ணாசாமி அய்யரிடம் சென்று, "என்ன ஸார்! இந்தப் பயல் இத்தனை அட்டஹாசம் பண்ணுகிறானே, இவனுக்கு என்ன சம்பளம்? 200 வது இருக்குமோ?" என்று கேட்பார்கள். அண்ணாசாமி அய்யர் என்னுடன் ரொம்ப நெருங்கிப் பழகிய போதிலும் அவருக்கும் நான் என் சம்பளத்தைச் சொன்னதில்லை.

● பக்கத்து வீட்டுக்காரரானாலும் சம்பளத்தைச் சொல்லுவதில்லை என்று நான் தீர்மானம் பண்ணியிருக்கிறேன். ஒரு தடவை, நான் இன்னொரு வீட்டில் குடியிருந்தபோது, பக்கத்து வீட்டுக்காரர் என்னை சம்பனம் என்னவென்று விசாரித்தார். தற்காலத்தில் சம்பனத்தைக் கொண்டுதான் நம் அந்தஸ்தை மதிப்பிடுகிறார்கள் அல்லவா? ஆகவே மிகப் பெருமையாக சம்பளத்தை இரட்டிப்பாகச் சொல்லி வைத்தேன். அவ்வளவுதான், வந்தது அனர்த்தம்! "ஏன் ஸார், இத்தனை சம்பனம் வாங்குகிறீர்களே, நான் நடத்தும் பள்ளிக்கூடத்துக்கு ஒரு ஐம்பது ரூபாய் நன்கொடை கொடுத்தால் என்ன?" என்று நோட்டுப் புஸ்தகத்தை நீட்டி விட்டார்! இதிலிருந்து நான் சம்பனத்தைப் பக்கத்து வீட்டுக்காரருக்கும் சொல்லுவதில்லை.

ஆகவே அவருக்கும் என் சம்பனம் என்னவென்று தெரியாது. இருந்தாலும் கேட்பவர்களிடம் தெரியாது என்று காட்டிக் கொள்வாரா? மாட்டார்.



நாம் அணியும் அங்க வஸ்திரத்தைக் கொண்டோ? ...

சமயத்துக்குத் தகுந்தாற்போல் பதில் சொல்லி அனுப்புவார்.

நான் சமயம் என்று குறிப்பிடுவது அவருக்கும், எனக்கும் உள்ள உறவு அந்த சமயத்தில் இருப்பதைப் பற்றித் தான். பக்கத்துப் பக்கத்து வீட்டுக் காரர்களான படியால் எங்கள் உறவு நாளொரு நிறுகம், பொழுதொரு வண்ணமுமாகத் தான் இருக்கும். ஒரு நாள் ஒரேயடியாக இழைவோம். இன்னொரு நாள் 'உம்'மென்று உம்மணாமூஞ்சி மாதிரி முகத்தை வைத்துக் கொண்டிருப்போம். நாங்கள் இழையும் நாளாயிருந்தால், "அந்தப் பயலுக்கு என்ன ஸார்! மாதம் 300, 400 சம்பாதிக்கிறான்" என்று பதில் சொல்லுவார். 'உம்'மென்று முகத்தை வைத்துக் கொண்டிருக்கும் நாளாயிருந்தால், "எல்லாம் பகட்டு ஸார்! 73 ஓ 74 ஓ தான் சம்பளம். சும்மா வீண் தடபுடல் பண்ணுகிறான்" என்பார்.

● சிலர் இருக்கிறார்கள். இவர்கள் போலீஸ் இலாகாவில் இருக்க வேண்டியவர்கள் — தப்பிப் போய் வேறு உத்தியோகங்களில் இருக்கிறார்கள் என்பது என் அபிப்பிராயம். துப்பறிவதில் அத்தனை கெட்டிக்காரர்கள்.

இவர்கள் நான் கட்டிக் கொண்டிருக்கும் வேஷ்டியைக் கொண்டோ, அல்லது போட்டுக் கொண்டிருக்கும் சட்டையைக் கொண்டோ என் சம்பளம் என்னவென்று கணக்குப் போட்டு விடுவார்கள்.

என்னைக் கண்டதும் இவர்கள் கேட்கும் முதல் கேள்வி, "என்ன ஸார்! நீங்கள் போட்டுக் கொண்டிருக்கும் அங்க வஸ்திரம் ரொம்ப அழகாயிருக்கிறதே! என்ன விலையோ!" என்பதுதான்.

அங்க வஸ்திரம் ஐந்து ரூபாய் என்று சொல்லுகிறேம் என்று வைத்துக் கொள்ளுங்கள். உடனே நமக்குச் சம்



... அல்லது மனைவியின்
புடவையைக் கொண்டோ ...

பளம் ரூ. 50 என்று கணக்குப் போட்டு விடுவார்கள். ஏனெனில் ரூ. 100 சம்பளம் வாங்கும் அவர்கள் ரூ. 10 அங்க வஸ்திரம் அணிந்திருக்கிறார்கள் அல்லவா?

வேறு சிலர் நாம் குடியிருக்கும் வீட்டைப் பார்த்துவிட்டோ, நம் மனைவி அணியும் புடவையின் மதிப்பைக் கொண்டோ, நம் சம்பளத்தைக் கணக்கிடுவார்கள்.

இவர்கள் இதற்கென்றே ஒரு தனிக் கணக்கு போட்டு வைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு ஊரிலும் வீட்டு வாடகையை எந்த எண்ணிக்கையைக் கொண்டு பெருக்கினால் சம்பளம் வரும் என்பது இவர்களுக்குத் தெரியும்.

● எதிர்த்த வீட்டில் ஒருவர் இருக்கிறார். அவர் என்னைப் பார்த்தால் பேசும் போதெல்லாம் சாமான்கள் விற்கும் கிராக்கியைப் பற்றியும், குடித்

தனம் நடத்த ஜனங்கள் படும் கஷ்டத்தைப் பற்றியும் தான் பேசுவார். என்னால் கஷ்ட மில்லாமல் குடித்தனம் பண்ண முடிகிறதா என்று வெகு அக்கரையாக விசாரிப்பார்.

"தேவலையே, எதிர்த்த வீட்டுக்காரர் நம்மீது இத்தனை அக்கரையாக இருக்கிறாரே" என்று நான் சந்தோஷப்படுவதுண்டு. ஆனால் இன்றுதான் தெரிகிறது அந்த மனுஷனின் தந்திரம். என் சம்பளம் என்ன வென்று அறிந்து கொள்வதற்காகத்தான் அவர் ஒவ்வொரு தடவையும் குடித்தனம் நடத்த ஜனங்கள் படும் கஷ்டத்தைப் பற்றிப் பேசி யிருக்கிறார். அட பாவி! இதற்காகத்தானா, நீ என்னைக் கண்டபோதெல்லாம், "ஏன் ஸார்! இந்தக் காலத்தில் ரூ. 100யாவது இல்லாமல் குடித்தனம் பண்ண முடியுமா?" "ரூ. 150வது இல்லாமல் குடித்தனம் பண்ண முடியுமா?" "200 வது இல்லாமல் குடித்தனம் பண்ண முடியுமா?" என்று எண்ணிக்கையை மாற்றி மாற்றிக் கேட்டுக்கொண்டே வந்தது?

நான் என் பெண்ணுக்கு என்ன வரதக்ஷிணை கொடுத்தேன் என்று மிக அக்கரையாக விசாரித்தாரே, அவர்கூட அதைக் கொண்டு என் சம்பளத்தை அறிவதற்காகத்தான் கேட்டாரோ! நான் எத்தனை ஆயிரத்துக்கு இன்ஷூர் பண்ணியிருக்கிறேன் என்று மிகப் பரிவுடன் அடிக்கடி விசாரித்துக் கொண்டிருக்கிறாரே ஒருவர், அவர்கூட அதைக் கொண்டு என் சம்பளத்தை அறிவதற்காகத்தானோ?

என்னமோ போங்கள்! இப்பொழுதெல்லாம் யார் என்னை என்ன கேள்வி கேட்டாலும் என் சம்பளத்தை அறிவதற்காகத் தான் கேட்கிறார்கள் என்று தோன்றுகிறது.

● இன்றைக்குப் பாருங்கள். என் பக்கத்து வீட்டுக்குப் புதிதாகக் குடி வந்திருப்பவர் என் கடைசிப் பையன் 'கான்வென்ட்'டில் வாசிக்கிறானா, அல்லது கார்ப்பொரேஷன் ஸ்கூலிலா என்று விசாரித்தார். அதைக் கேட்டதும் எனக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்து விட்டது. "ஏன் ஐயா! என் சம்பளம் என்னவென்று தெரிந்து கொள்வதற் காகத்தானே இத்தனை தந்திரமாகக் கேள்வி போடுகிறீர்? உம் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாது, போம்" என்று அவரை விரட்டியடித்து விட்டேன்.

ஐயோ பாவம், அவர் தமது பையனையும் என் பையனுடன் சேர்த்து அனுப்புவதற்காகத்தான் விசாரித்தார் என்று பின்னர் தெரிந்தது.

சாதுரியக் கதை

யாருக்குப் பைத்தியம்?

● தனபாலு செட்டியாருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதோ என்றுதான் நினைக்க வேண்டியிருந்தது. அன்றிரவு அமாவாசை பலகாரம் சாப்பிட்டுக் கையலம்பப் புழக் கடைப் பக்கம் சென்றதும், மனைவியை அழைத்து ஒரு தவலையில் ஜலம் கொண்டு வரச் சொன்னார். அவ்வளவு ஜலத்தையும் எதிரில் இருந்த அவரைப் பந்தலின் மீது உமிழ்ந்தார். மறுபடியும் ஒரு தவலை ஜலம் கொண்டு வரச் சொன்னார். அதையும் கொப்பளித்துத் தீர்த்தார். இப்படியே ஐந்தாறு தவலை ஜலம் கொப்பளித்துத் தீர்க்கப்பட்டது. செட்டியாரின் மனைவிக்குத் தன் கணவனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்பதில் கொஞ்சம் கூடச் சந்தேகம் ஏற்படவில்லை. அவளுக்கு ஒரே பயமாய்ப் போய்விட்டது.

"உங்களுக்கு என்ன வந்து விட்டது? ஏன் இப்படிக் கொப்பளிக்கிறீர்கள்?" என்று பயத்தினால் நடுங்கிக் கொண்டே கேட்டாள்.

தனபாலு செட்டியார், அதற்குப் பதில் சொல்லியிருந்தால் அவர் மனைவியின் பயம் நீங்கியிருக்கும். அவர் பதில் சொல்லுவதற்குப் பதிலாக அவள் முகத்திலும் இரண்டு வாய் ஜலத்தை உமிழ்ந்தார். அவருக்குப் பைத்தியந்தான் பிடித்துவிட்டதென்பதற்கு இதை விட அத்தாட்சி வேறு என்ன வேண்டும்?

"ஐயோ, என் புருஷனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதே! யாராவது வாருங்களேன்!" என்று செட்டியார் மனைவி கத்தவே அண்டை அயல் வீட்டார் எல்லாம் திபுதிபுவென்று வந்து கூடினார்கள்.

செட்டியார், "ஐயா, மகாஜனங்களே! இவளைக் கலியாணம் செய்துகொண்டு ஏழு வருஷமாகிறது. இவளுக்கு வேண்டிய நகைகள் போட்டிருக்கிறேன். இன்னும் எவ்வளவோ செய்திருக்கிறேன். அப்படியெல்லாம் இருந்தும், இரண்டு வாய் ஜலம்



தான் இவள் மேல் உமிழ்ந்தது இவளுக்குப் பொறுக்கவில்லை. ஆனால் அந்த அவரைப் பந்தலுக்கு அடியிலிருக்கும் மகானுபாவன் மேல் ஆறு தவலை ஜலத்தை உமிழ்ந்தும் வாய் திறவாமலிருக்கிறான். அவன் எவ்வளவு பொறுமைசாலி பாருங்கள்!" என்றார்.

ஊர் ஜனங்கள், அந்த அவரைப் பந்தலில் மறைந்திருந்த திருடனைப் பிடிக்காமலிருப்பார்களா? அல்லது செட்டியார் அவனைப் பிடிப்பதற்குச் செய்த தந்திரத்தைத்தான் மெச்சாமலிருப்பார்களா?

அரட்டைக் கச்சேரி

● "ஏன் ஸ்வாமி! ஊரில் குழந்தை, குட்டிகள் எல்லாரும் சௌக்கியந்தானே?" என்று அக்கப்பிச்சுவைப் பார்த்து வாயாடி வராகசாமி கேட்டார்.


"ஊரில் இருக்கிற குழந்தை, குட்டிகளைப் பற்றி எனக்கென்னய்யா வந்தது!" என்று பதில் அளித்தார் அக்கப்பிச்சு.

"ஊரில் இருக்கிற குழந்தை குட்டிகளைப் பற்றிக் கேட்கவில்லை ஐயா! உம்முடைய குழந்தை குட்டிகளைப் பற்றித்தான்."

"எனக்கேது, ஐயா குழந்தை, குட்டிகள்! எனக்கு இன்னும் கல்யாணமே ஆகவில்லையே!"

"அப்படியானால் நீர் ரொம்ப அதிர்ஷ்டசாலிதான்."

"என் அதிர்ஷ்டத்தை நீர்தான் மெச்சிக்க வேணும். பழைய வேலையை விட்டுட்டேன். புதிதாக வேலை ஒன்றும் கிடைக்கவில்லை. அதுதான் உம்மிடம் வந்தேன்."



● "ஏன் பழைய வேலையை விட்டு விட்டீர்?"

"பழைய வேலையா? அவனிடம் வேலை பார்ப்பதற்கு ஒரு மடையனிடம் வேலை பார்க்கலாங்காணும்! அதற்குத்தான் அவனை விட்டு விட்டு உம்மிடம் வந்தேன்."

"ஓய்! என்ன, என்னைப் பார்த்து மடையன் என்கிறீர்?"

"என்ன ஸ்வாமி! நான் ஏதாவது சொன்னால் தப்பர்த்தம் செய்து கொண்டு சண்டைக்கு வந்து விடுகிறீரே! அது இருக்கட்டும். ஏதாவது வேலை கிடைக்குமா, அதைச் சொல்லும்!"

"இந்தக் காலத்தில் வேலைக்கு என்ன குறைவு? ஏ. ஆர். பி. வேலை இருக்கவே இருக்கிறது!"

"அது என்ன ஐயா, ஏ. ஆர். பி. வேலை?"

"அதுவா? எனக்குத் தெரிந்து ஏ. ஆர். பி. வேலை என்றால் ஊரிலுள்ள எலக்டிரிக் விளக்குகளையெல்லாம் அணைத்து விட வேண்டியது ......"

"சிவ சிவா, அப்படியானால் அந்த வேலை எனக்கு வேண்டியதில்லை. விளக்கேற்றி வைத்தால் புண்ணிய முண்டென்று சொல்வார்கள். அதைப் போய் அணைக்கவாவது ... மகா பாபம்."

"என்னய்யா சுத்த கட்டுப் பெட்டியாயிருக்கிறீரே, நீர் எதற்குத்தான் லாயக்கென்று தெரியவில்லை. அடுத்த வாரம் வாரும், பேசிக் கொள்ளலாம்."

"ஆஹா! பேஷாக வருகிறேன்."

வேறு நினைப்பு

[கு. ப. ராஜகோபாலன்]

சித்திரை மாதத்தில் பௌர்ணமி இரவு; ஊதா வர்ண நிலா. மாடி வெட்ட வெளியில் நாற்காலியைக் கொண்டுபோய்ப் போட்டுக் கொண்டு சாய்ந்து கொண்டேன். ஆனால் அந்த நிலவில் வியப்பொளியுடன் துலங்கிய வெளியுலக அழகை நான் அப்பொழுது அனுபவிக்க முடியவில்லை. அன்று விடிந்தது முதல் உள்ளத்தில் இடைவிடாமல் உறுத்திக் கொண்டிருந்த கதையின் மனோதத்துவச் சிக்கல்தான் அப்பொழுதும் என் நினைவிலிருந்தது.

என் மனைவி வந்து அருகில் இருந்த பெஞ்சின் மேல் உட்கார்ந்தது கூட எனக்குத் தெரியாது.

"என்ன, கதை எழுதப் போகிறீர்களோ, இவ்வளவு யோசனை? இதோ பாருங்கள், இனிமேல் கதை எழுதினீர்களானால் எனக்குக் கெட்ட கோபம் வரும். கட்டுரை, கவிதை என்று வருகிறதே, அந்த மாதிரி ஏதாவது எழுதுங்கள். கதை எழுதுகிறேன் என்று வீட்டில் நடப்பதை எல்லாம் எழுதி என்னைச் சந்தியில் இழுக்காதீர்கள், சொல்லி விட்டேன். காதில் விழுந்ததா?" என்றாள் காமு.

"காதில் விழுந்ததா?" என்ற வார்த்தைகளை மட்டும் அவள் கொஞ்சம் உரக்கச் சொன்னதால் நான் நினைவு பெற்று அவளைத் திரும்பிப் பார்த்தேன். அவள் முன்னால் சொன்னது ஒன்றும் என் காதில் விழவில்லை என்று என் முகத்திலிருந்து கண்டதும் அவள் முகம் சட்டென்று சிவந்தது.

"என்ன சொன்னாய் காமு? ஏதோ வேறு நினைப்பாக இருந்து விட்டேன்!" என்றேன்.

"வேறு நினைப்பு இப்பத்தானா என்ன! இன்று முழுவதும்தான் — ஏன், வேறு நினைப்பு இல்லாமல் இருந்தது எப்பொழுது, சற்றுச் சொல்லுங்கள்!"

அவளுடைய குரலில் கோபமும் மனஸ்தாபமும் கலந்திருந்தன. அந்த நிலைமையில் கதையின் மனோதத்துவச் சிக்கலுக்கு உள்ளத்தில் இடம் கொடுக்கக் கூடாது என்று அதைப் பலாத்காரமாக அப்புறப்படுத்தி விட்டு அவளைச் சமாதானம் செய்யும் குரலில் "இப்பொழுதானே, காமு, சற்று—' என்று ஆரம்பித்தேன்.

"இப்பொழுதானா! சாயங்கிரம் 'தட்டான் வந்திருந்தான்' என்றேன். 'நாளைக்கு வரச்சொல்!' என்றீர்கள்."

"ஓகோ, தட்டானா வந்திருந்தான்? தச்சன் என்று சொன்னால் போலிருந்தது."

"'வண்ணான் வந்தானே!' என்று பாடினது போலக்கூட இருக்கும்!" என்று சொல்லி அவள் கோபச் சிரிப்புச் சிரித்தாள்.

"வளையல்கள் கொண்டு வந்து கொடுத்தானா? போட்டுக் கொண்டாயா?" என்று கேட்டேன்.

"அதைப்பற்றி உங்களுக்கு என்ன கவலை? சாவகாசமாக —"

"கோபித்துக் கொள்ளாதே! எங்கே வளையல்கள், கைக்குச் சரியாக இருக்கின்றனவா?"

"சாப்பிடுகிறபோது பார்க்கவில்லையா?"

நான் என்ன பதில் சொல்லுகிறது? வாயை மூடிக்கொண்டு அவள் கையை எடுத்து நிலா வெளிச்சத்தில் பார்த்தேன். அவை அவள் கைநிறமான பொன்னோடு பொன்னாக இருந்தன. அப்பொழுது அவள் முகத்தைக் கவனித்தேன். நெற்றியிலிருந்த பெரிய குங்குமப் பொட்டைக் கண்டதும் அன்று மாலை நடந்த விஷயம் ஞாபகத்துக்கு வந்தது.

சாயங்கிரம் காமு அலங்காரம் செய்து கொண்டு வெகு உத்சாகமாக என்னிடம் வந்து "கோவிலுக்குப் போவோம் வாருங்கள்!" என்றாள்.

என் கதை நினைப்பு எனக்கு. அவள் சந்தோஷத்தையும் பெருமையையும் அனுபவித்து அவள் இஷ்டத்தைப் பூர்த்தி செய்யும் ஆற்றல் அப்பொழுது எனக்கு ஏற்படவில்லை.

"இல்லை, காமு, நீ மட்டும் குழந்தைகளை அழைத்துக்கொண்டு போய்விட்டு வா!" என்றேன்.

"ஏன், கூட வந்தால் பாவமா?"

"இதென்ன சங்கடம்? உனக்கு வேண்டுமானால் போய்விட்டு வாயேன். என்னை ஏன் கட்டி இழுக்கிறாய்?"

"ஏன் என்னோடு வருவதற்கு உங்களுக்கு வெட்கமாக இருக்கிறதா?"

"என்ன காமு இப்படிப் பேசுகிறாய்?"

"எப்படிப் பேச வேண்டும்?......... நீங்கள் தான் பேசி எனக்கும் சொல்லிக் கொடுங்களேன். என்றாவது ஒருநாள் தாராளமாக, சந்தோஷமாக, சற்று நேரம் என்னுடன் பேசி இருக்கிறீர்களா?"

"பேசாமலா குடும்பம் நடக்கிறது?"

"'என்ன சமையல்?' 'காப்பி ஆகிவிட்டதா?' 'இலை போடு!'—இதெல்லாம் பேச்சா? அன்று வேலைக்காரி கூட 'என்னம்மா இப்படி இருக்காரு? எப்பப் பாத்தாலும் சண்டை போடுகிற மாதிரி பேசாமல் இருக்காரே!' என்று கேட்டாள். நான் என்ன பதில் சொல்லுகிறது?"

"என்ன சொன்னாய்?"

"'அவர் சுபாவம்' என்றேன். 'என்ன சுபாவம் அம்மா!' என்று ஆச்சரியப்பட்டாள்."

"அவள் என்ன செய்ய வேண்டும் என்கிறாள்? நீ என்ன செய்ய வேண்டும் என்கிறாய்?"

"ஆமாம், செய்யச் சொல்லுகிறேன் சட்டியும் பானையும்!" என்று சொல்லி விட்டுக் காமு கோவிலுக்குப் போனாள்.

● அவள் போய்விட்டு வீட்டுக்குத் திரும்பி வந்தபொழுதும் நான் அதே நிலையில்தான் தியானத்திலிருந்தேன்.

"இந்தாருங்கள்!" என்று ஏதோ கையில் கொடுத்தாள்.

இன்னதென்று பார்க்காமலே விபூதி என்ற ஞாபகத்தில் நெற்றியில் கொஞ்சம் பூசிக்கொண்டு பழக்கத்தின் காரணமாக வாயில் கொஞ்சம் போட்டுக் கொண்டேன்.

"நன்றாயிருக்கு. குங்குமத்தை வாயில் போட்டுக் கொள்ளுகிறீர்களே!" என்றாள் காமு. பிறகு சிரித்துக் கொண்டே கொப்புளிக்க ஜலம் கொண்டு வந்தாள்.

"ஆமாம், பிறகு சாப்பிடுகிறேன் என்றீர்கள். காப்பியை மூடி வைத்து விட்டுப் போனேனே, சாப்பிட்டீர்களா?" என்று கேட்டாள்.

"இல்லையே, மறந்து போய் விட்டேன்!"

உடனே அவள் முகத்திலிருந்த கேலியும் மனஸ்தாபமும் மறைந்தன. சட்டென்று அருகில் வந்து "இப்படி இருக்கிறீர்களே நீங்கள்! பசி தாகம் கூட வரவரத் தெரிகிறதில்லை!" என்று பரிதபித்தாள்.

"இப்பொழுது காப்பி சாப்பிடுகிறீர்களா? இலை போடட்டுமா?"

"இலை போட்டுவிடேன்!" என்றேன்.

பிறகு சாப்பிட்டு விட்டு மாடியில் வந்து படுத்ததுதான் தெரியும். காமு கடிந்து கொண்ட பிறகுதான் நினைவு வந்தது.

காமுவின் புகார் பிசகில்லை. அவளை நான் அலட்சியம் செய்யவில்லை என்பது அவளுக்கு நன்றாகத் தெரியும். அவளிடம் நான் முற்றிலும் ஈடுபட்டிருந்தேன் என்பதும் தெரியும். நான் அவளை எதிலும் கடிந்து கொள்வதில்லை என்பதை உணர்ந்திருந்தாள். அந்த மகிழ்ச்சி ஒவ்வொரு சமயம் விசேஷமாகத் தலை தூக்கும்போது அவளுக்கு உல்லாச புத்தியும் பெருமையும் அதிகமாகி விடும். அப்பொழுது அந்த உள்ள மலர்ச்சியின் தூண்டுதலில் என்னுடன் கல கலப்பாகப் பேச வேண்டுமென்று வருவாள். விதியின் விபரீத ஏற்பாடோ என்னவோ, அநேகமாக அந்த மாதிரி சந்தர்ப்பங்களில் நான் ஏதோ ஞாபக

ம்மாக வேறு நினைவாக இருப்பேன். அவள் பேசுவதற்கெல்லாம் 'ஆமாம்' 'இல்லை' என்று ஒற்றை வார்த்தைகளில் தாறுமாறாகப் பதில் சொல்லுவேன். அவளுக்குக் கோபமும் துக்கமும் வந்து விடும். பிறகுதான் எனக்கும் நினைவு வரும். என்ன பிரயோஜனம்?

● முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு காமு உட்கார்ந்திருந்தாள். "காமு, இவ்வளவு வருஷங்கள் என்னுடன் பழகி இருக்கிறாயே. என் சுபாவத்தை அறிந்தும் நீ ஏன் இப்படி வேதனைப்படுகிறாய்?" என்றேன்.

அவள் என் பக்கம் திரும்பி "நீங்கள் வேண்டுமென்று அலட்சியம் செய்யவில்லை என்று தெரியவில்லையா எனக்கு? ஆனால் உங்கள் சுபாவம் என்கிறீர்களே, அது தப்பு! ஏதோ ஞாபகமாக வேறு நினைப்பாக இருப்பது உங்கள் சுபாவமல்ல; நான் வந்த புதிதில் இந்த சுபாவம் எங்கே போயிருந்தது?" என்று கேட்டாள். கேட்டு விட்டு லேசாகப் புன்னகை செய்தாள்.

நான் திகைத்துப் போனேன். காமு பளிச்சென்று உண்மையை ஒரு கேள்வியில் வெளியிட்டு விட்டாள்.

ஏதோ ஞாபகம் — வேறு நினைவு — என் சுபாவம்! அவள் வந்த புதிதில் அது எங்கே போயிருந்தது?

"நீதான் சொல்லேன்; எனக்குத் தெரியவில்லை" என்றேன்.

"என்ன சொல்ல வேண்டும்? உங்களுக்கு ஏன் இந்த வேறு நினைப்பு ஏற்பட்டு விட்டது என்றா? இப்பொழுது கதைகள் எழுதுகிறீர்கள், அப்பொழுது எழுதவில்லை. இதுதான், தெரியவில்லையா?"

"இல்லை, இல்லை, எனக்குத் தெரிகிறது. அப்பொழுது உன்னை அறிய வேண்டும் என்ற ஆவல் இருந்தது. உன்னை அறிந்து விட்டேன். ஆவல் ஓய்ந்து விட்டது."

காமு கொல்லென்று சிரித்தாள்.

"என்னை அறிந்து விட்மர்களா? பெண் உள்ளத்தை முற்றிலும் அறிய முடியாது, பெண் ஒரு புதிர் என்று நீங்களே சொல்லி யிருக்கிறீர்களே! இப்பொழுது என்னை அறிந்து விட்டதாகச் சொல்லுகிறீர்கள்?"

"காமு! நீ கைகாரிதான். என்னை மடக்கி விட்டாயே! பின் நீதான் சொல்லேன் காரணத்தை!"

"எனக்கும் தெரியாது. அனுபவம் கொண்டவர்கள் சொல்லுவார்கள்; நீங்களும் கேட்டிருப்பீர்கள். மனதுதான் எல்லாவற்றிற்கும் காரணம்; வேறொன்றுமில்லை!" என்றாள்.

நானும் உத்சாகமாக "எல்லாந்தான் தெரிந்திருக்கிறதே, பின் ஏன் கலகம் பிடிக்கிறாய்?" என்றேன்.

"பின், நீங்கள் கதை எழுதுவதெப்படி?"

"நீ கோபித்துக் கொள்ளவும் வேண்டாம், நான் கதையும் எழுதவில்லை."

"இரண்டும் நடக்காத காரியம்."

"ஏன் நடக்காது?"

"ஏனென்றால் அப்படித்தான், போங்கள்! என்றால் பதில் சொல்ல முடியாது!" என்று உள்ளே போகத் திரும்பினாள்.

"காமு, இந்தா நீ பதில் வேண்டுமானால் சொல்ல வேண்டாம். உட்காரு, இப்படி!"

"எதற்காகவாம்?" என்று அவள் திரும்ப பெஞ்சில் வந்து உட்கார்ந்தாள்.

"ஒரு விஷயம் சொல்ல வேண்டும். இப்பொழுதுதான் உதயமாயிற்று. இந்த வேறு நினைப்பு என்றிருக்கிறதே —என்ன தெரியுமா?"

"சொல்லுங்களேன்!"

"அது உண்மையில், பார்க்கப் போனால் — உன் நினைப்புத்தானடி காமு!"

"பொய்யும் புளுகும் சொல்லிக் கொண்டு!" என்று விளையாட்டாகக் கோபித்தாள்.

"நிஜமாகக் காமு! உன் நினைப்பில்லா விட்டால் வேறு நினைப்பு என்று இது எங்கிருந்து வரும்? அதற்கு நீ தான் காரணம்" என்றேன்.

அப்பொழுது அவள் முகத்தில் தோன்றிய பெருமையைப் பார்க்க வேண்டுமே.

"இனி மேல் என்னிடம் சண்டை பிடிக்காதே, கோபித்துக் கொள்ளாதே?" என்றேன் நான்.

"பின் யாரிடத்தில் பிடிப்பேன்?" என்று வேடிக்கையாகச் சண்டைக்கு வந்தாள்.

இரண்டாவது முறையாக அவள் கேள்வி என்னை பிரமிக்கச் செய்து விட்டது; ஆனால் இன்ப மயமாக இருந்தது.

படித்துப் பார்!

சுகம் எங்கே? ★

[ஆசிரியர்: வி. ஸ. காண்டேகர்; மொழி பெயர்ப்பு: கா. ஸ்ரீ. ஸ்ரீ. பிரசுரம்: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை; விலை: ரூபா 2.]

முத்தண்ணா சமூக ஊழியத்தில் சுகத்தைக் காண நினைக்கிறார். இன்ஷ்யூரன்ஸ் ஏஜெண்டு ஆனந்தன் குடும்பத்திலிருந்து அடைவதுதான் சுகம் என்று நினைக்கிறான். தூய காதலில் நிலைத்த உஷா அதில் சுகம் இருப்பதாக நினைக்கிறாள். மாணிக்கம் சமூகத் தொண்டாற்றி அதன் மூலம் சுகம் பெற முயலுகிறான். சினிமா நடிகை சஞ்சலா தன்னைக் காண வருவோரெல்லாம் தன் அழகுக்காக வருகின்றனர் என்று உணர்ந்து தனக்காகத் தன்னைக் காதலிப்பவன் ஒருவன் இருப்பானா என்று ஏங்குகிறாள். அதில்தான் சுகம் இருப்பதாக அவள் நினைக்கிறாள்.

இத்தனை பேரையும் ஒன்று சேர்த்து—அவர்கள் கருத்தையும் சேர்த்து — சுகம் எங்கே என்ற கேள்வியைக் கேட்டு நம்மைத் திணற வைக்கிறார் ஆசிரியர். இந்நூலைப் படித்ததும் சுகம் என்ன என்பதைத் தெரிந்து கொள்ளாமலே சுகமாயிருந்து விடலாமென்று தோன்றுகிறது. இந்நூலில் வரும் ஒவ்வொருவரும் சுகத்தையடைய அவ்வளவு பாடு படுகின்றனர். எது எப்படியிருந்தாலும் மொழி பெயர்ப்பு சுகமாயிருக்கிறது. ஏன்? மேல் அட்டையும் புத்தகத்தின் அமைப்பும் கூடச் சுகமாயிருக்கின்றன.

சிவ மானஸிக பூஜா கீர்த்தனங்கள்

[பிரசுரம்: ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம், ஸ்ரீ சங்கர மடம், கும்பகோணம்; விலை அணா 10.]

"'ப்ருஹிமுகுந்தேதி' என்னும் பாட்டு யார் பாடியது?" என்று கேட்டால், நம்மில் அநேகர், "நாரதர் பாடினார்!" என்று பளிச்சென்று பதில் சொல்லத் தயாராயிருப்போம். உண்மையில், அக் கீர்த்தனத்தின் ஸாஹித்யகர்த்தா தமிழ்நாட்டில் சில காலத்துக்கு முன்பு வாழ்ந்திருந்த ஸ்ரீ சதாசிவப் பிரம்மேந்திரர் என்னும் மகா புருஷர். இன்னும் செம்மங்குடி சீனிவாசய்யரால் பிரபலமாக்கப்பட்ட "மானஸஸஞ்சரரே" "பஜரே கோபாலம்" "நஹிரே நஹி சங்கா" முதலிய எத்தனையோ அரிய வேதாந்தக் கருத்துக்கள் அடங்கிய ஸம்ஸ்கிருத கீர்த்தனங்களையும் அந்த மகான் அருளியிருக்கிறார். அவற்றையும், இன்னும் அவர் இயற்றிய சில ஸம்ஸ்கிருத நூல்களையும் ஸ்ரீ வ. நாராயணன் எம். ஏ. எம். எல். அவர்களின் தமிழ் — ஆங்கில மொழிபெயர்ப்புக்களுடன் இந்தப் புத்தகத்தில் வெளியிட்டிருக்கிறார்கள். சங்கீத உலகத்துக்குச் சிறந்த தொண்டு.

●●●

அரை நிமிஷக் கதை

ஜூங்கிப் புடவை

● ஒரு ஊரில் ஒரு பெரிய புடவை வியாபாரச் செட்டியார் இருந்தார். அவரிடம் கர்நாடக மோஸ்தர் புடவைகள் நிறைய இருந்தன. அவர் கடையில் புடவைகள் வாங்குவதற்கு உள்ளூரிலிருந்தும், பக்கத்து ஊர்களிலிருந்தும் பணக்கார ஸ்திரீகள் வந்து குழுமுவார்கள்.


செட்டியார் துரதிர்ஷ்டம் பக்கத்துக் கடைக்குப் போட்டி வியாபாரி ஒருவர் வந்து சேர்ந்தார். அவர் செட்டியாரைப் போல் கர்நாடக மோஸ்தர் புடவைகள் விற்காமல் அப்பொழுதுதான் பரவ ஆரம்பித்திருந்த ஜுங்கிப் புடவைகளை விற்க ஆரம்பித்தார். ஜுங்கிப் புடவைகளைக் கண்டதும், ஸ்திரீகள் அவற்றின் மீது மோகங்கொண்டு, கர்நாடக மோஸ்தர் புடவைகளை வாங்குவதை விடுத்து ஜுங்கிப் புடவைகள் வாங்க ஆரம்பித்தனர். செட்டியாரின் வியாபாரம் வரவரக் குறைய ஆரம்பித்தது.

● செட்டியாருக்கு முதலில் என்ன பண்ணுவது என்று தெரியவில்லை. ஒரு கண நேரம் தம் வழுக்கைத் தலையைச் சொறிந்து விட்டுக் கொண்டார். பிறகு பக்கத்துக் கடைக்குப் போய் இருபது ஜுங்கிப் புடவைகள் வாங்கினார்.

புடவைகளை எடுத்துக் கொண்டு செட்டியார் கடை வீதி வழியாகப் போனார். வழியில் பிச்சைக்காரி, தோட்டிச்சி, குறத்தி முதலியவர்களாகப் பார்த்து, அந்த ஜுங்கிப் புடவைகளை இனாமாகக் கொடுத்துக் கட்டிக் கொள்ளச் சொன்னார்.


● அடுத்தநாள் பணக்கார ஸ்திரீகள் தெரு வழியே போகும்போது பிச்சைக்காரிகள், குறத்தி முதலானோர் ஜுங்கிப் புடவைகள் கட்டிக்கொண்டு போவதைக் கண்டதும் திகைத்துப் போயினர். "சட்! இதை எல்லாரும் கட்டிக்கொள்ள ஆரம்பித்து விட்டார்கள். இனிமேல் இதை நாம் உபயோகித்தால் நமக்கு அவமானம்" என்று தீர்மானித்து புது ஜவுளிக் கடைக்குப் போவதை நிறுத்தி, பழையபடி செட்டியார் கடைக்குப் போக ஆரம்பித்தனர்.

பத்துத் தடவைதான்!




உபாத்தியாயர்:—கிட்டு, ஒரு நாளுக்குப் பத்துத் தரமாகக் கணக்கைக் கூட்டிப் பார்த்தாயா?

பையன்:—நீங்கள் சொன்னமாதிரியே பத்துத் தடவை கூட்டினேன். இப்பத்து விதமான விடைகள் வந்திருக்கின்றன!



குருத்து மட்டை பழுப்பது சகஜம்
பழுத்த மட்டை குருத்தாவது சாத்யமா?



சின்னப்பா - ராஜகுமாரி

சிவன் - ஜானகி	கிருஷ்ணன் - மதுரம்
கோவிந்தன் - மீனலோசனி	நாராயணராவ் - துரைராஜ்
R. பாலசுப்ரமண்யம்	D. பாலசுப்ரமண்யம்

ஸ்டுடியோ - நியூடோன்

Regd. No. M. 4392

Edited, Printed and Published by R. Krishnamurthy, at the "Kalki" Press, 116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras.